★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி நவீன சந்தை, யாழ்ப்பாணம்

மக்கள்! ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மணமக்கள் வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 29 வெள்ளிக்கிழமை (12 – 05 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 166

# வடபகுதி நோக்கி வரும் லொறிகளை தாமதப்படுத்த கடும் விதி முறைகள்

## 200க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஈரற்பெரியகுளத்தில் நிற்கின்றன

கொழும்பு, மே 12

கொழும்பிலிருந்து வடக்கு நோக்கி வந்த 200க்கு மேற்பட்ட லொறிகள் வவுனியாவில் உள்ள ஈரற்பெரியகுளம் சோதனை முகாமில் தரித்து நிற்கின்றன. படையினரால் புதிதாக கடைப்பிடிக்கப்படும் கடுமையான பாதுகாப்பு விதிகளே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி வரும் லொறிகளை தாமதமின்றி துரிதமாக சோதனையிட்டு அனுப்புவதற்காக வவுனியா, ஈரற்பெரிய குளம் சோதனை முகாமுக்குப் புறம்பாக புனானையிலும் சோதனை முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. தற்போது புனானை சோதனை முகாமை படையினர் மூடி விட்டனர். ஆகவே வடபகுதி வரும் முழு லொறிகளும் ஈரற்பெரியகுளம் இராணுவ முகாமில் வைத்தே சோதனையிடப்படுகின்றன.

அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் அல்லது பொது நிறுவனங்களின் ஏற்பாட்டில் வடக்கே செல்லும் லொறிகளுக்கான பாதை அனுமதி பத்திரம் வவுனியாவில் உள்ள படையினரால் வழங்கப்படுகிறது.

ஆனால் தனியார் துறையினருக்கு பொருள்களை எடுத்துச் செல்லும் லொறிகளே பாதை அனுமதிப் பத்திரம் வழங்கப் படாத நிலையில் ஈரற்பெரிய குளத்தில் தரித்து நிற்கின்றன.

இந்த லொறிகளுக்கான பாதை அனுமதிப் பத்திரத்தை எங்கு வைத்து வழங்குவது என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. [இ-4]

## பல்கலைக்கழக அனுமதிகுறித்து சந்திரிகா

கொழும்பு, மே 12

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர் வெற்றிடங்கள் ஏற்படும் போது —

யாழ். மாவட்டத்தில் அடுத்து ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

இது சம்பந்தமாக விரைவில் அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு, அது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினருக்கு ஆதரவாக கொழும்பில் சுவரொட்டி!

கொழும்பு, மே 12

நாடு பிரிவதில் இருந்து பாதுகாக்க பாதுகாப்புப் படையினர் யுத்தம் செய்ய முழு சுதந்திரம் வழங்க வேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் கொழும்பில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

பௌத்த பிக்குகள் அமைப்பு ஒன்று இந்தச் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

தமிழருக்கு எதிரான — துவேஷத்தை தூண்டும் சுவரொட்டிகள் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-3)

## கிளிநொச்சியில் பறந்த சிறிய ரக விமானம்

கொழும்பு, மே 12

யாழ். குடாநாட்டு வான் பரப்பில் சிறிய ரக விமானம் ஒன்று பறந்ததாக "த ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து கிளம்பி வானில் பல தடவைகள் வட்டமிட்ட அந்த விமானம் பின்னர் தளம் ஒன்றுக்குத் திரும்பியதாகவும் —

விடுதலைப்புலிகளின் பரீட்சார்த்த விமானத்தின் ஓட்டமாக அது இருக்கக் கூடும் என்றும் "ஐலண்ட்" செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இக் காலப் பகுதியில் இலங்கை விமானப் படையின் விமானங்கள் எதுவும் குடாநாட்டில் பறக்கவில்லை என்று 'ஐலண்ட்' செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

[ஐ-க]

## கொழும்புப் பத்திரிகைகள் இனக்கலவரத்துக்கு தூபம்

கொழும்பு மே 12

தமிழர்கள் கொழும்பில் கைதாகும் செய்திகளை முக்கிய இடம் கொடுத்து கொழும்புப் பத்திரிகைகளும், தொலைக்காட்சியும் வெளியிட்டு வருவது தெற்கில் சிங்கள வெறியர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரம் ஒன்றை மேற்கொள்ள தூபம் போடப்படுகிறது என்று மூத்த செய்தியாளர் லூசியன் ராஜகருணநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் கைதாகும் தமிழர்களை விடுதலைப் புலிகளின் ஒற்றர்களாகவும், பிரதிநிதிகளாகவும், ஊடுருவல்காரர்களாகவும் செய்தி நிறுவனங்கள் காட்டி வருகின்றன. இது சிங்கள வெறியர்கள் மீண்டும் தம்மை தாக்கலாம் என்ற அச்சத்தை தமிழர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது—என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முச்சந்தி முரளி



சனங்களை டட்டினி போடிறதில முன்னைய அரசை மிஞ்சி விடுவினம் போலபாருங்கோ!

## வடக்கை தாக்காதிருப்பது புலிகளின் புதிய யுக்தி

கொழும்பு மே 12

கடந்த சில நாட்களாக விடுதலைப் புலிகள் கிழக்குப் பகுதியில் தாக்குதல் நடவடிக்கைகளை அதிகரித்திருப்பதும்—

வடக்கில் அவ்வளவாக தாக்குதல் நடத்தாமல் இருப்பதும் – புலிகளின் புதிய யுக்தியை வெளிப்படுத்துவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

வட மாகாணத்தில் இராணுவம் பாரிய தாக்குதலில் ஈடுபட்டால் புலிகள் கிழக்கு இலங்கையில் தாக்குதல் நடத்தி இராணுவத்தின் கவனத்தை சிதறடிக்கும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடுமென இராணுவ வல்லுநர் ஒருவர் கருத்து வெளியிட்டார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## ரணிலின் பணிமனை அருகே நின்ற தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, மே 12

கொழும்பு கொள்ளுப்பிட்டியில், கேம்பிறிட்ஜ் பிளேஸில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்கவின் பணிமனை அருகில் நின்றதாகக் கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தகவல் திரட்டவே அந்த இளைஞர் அங்கு நின்றிருக்க வேண்டும் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர் கைதாகியுள்ளார்.

[ஒ-6]

# புலிகள் இரசாயன ஆயுதங்களை பாவிக்கும் சாத்தியம் உண்டாம்

## ஈரத் துவாய் வைத்திருக்க பூநகரி படைக்கு அறிவுறுத்து

கொழும்பு, மே 12

விடுதலைப் புலிகளால் வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் போது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தவுள்ளனர் என பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என "திவயின" பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஈரத் துவாய்களையும் தண்ணீர் வாளிகளையும் தயாராய் வைத்திருக்குமாறு இராணுவத் தலைமையகம் பூநகரி இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினருக்குத் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இரசாயன ஆயுதத் தாக்குதல்களில் இருந்து தப்புவதற்கு முக மூடிகள் உட்பட சகல உபகரணங்களும் இராணுவத்தினருக்கு வழங்கப்பட வேண்டும் எனகாலாட்படையை சேர்ந்த அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பயங்கர விஷ வாயுக்களை உற்பத்தி செய்யக் கூடிய ஆற்றல் விடுதலைப் புலிகளுக்கு உண்டு என இராணுவம் நம்புகிறது.

1990ஜூன் மாதம் கிரான் இராணுவ முகாம் மீது மேற்கொளப்பட்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் முதன் முதலில் விஷ வாயு பயன்படுத்தப்பட்டதென "திவயின" தெரிவித்திருக்கிறது.

பூநகரி முகாமுக்கு அண்மையில் விடுதலைப் புலிகள் பெருமளவில் ஒன்று சேர்வதாகவும் அவர்கள் எந்த நேரத்திலும் இராணுவத்தினர் மீது தாக்குதலை மேற்கொள்ள வாய்ப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 3 வெளி மாவட்டங்களில் இருந்து புலிவீரர்கள் யாழ். விரைகின்றனர்

### 'லங்காதீப' பத்திரிகையில் வெளியான செய்தி

கொழும்பு, மே 12

வடபகுதியிலுள்ள இரண்டு இராணுவ முகாம்களைத் தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என "லங்காதீப" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து புலிவீரர்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைக்கப்பட்டது இவ்வாறான தாக்குதலுக்கு தயாராவதற்கே என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது கிடைத்துள்ள தகவல்களின்படி ஆனையிறவு, பூநகரி ஆகிய இராணுவ முகாம்கள் புலிகளின் தாக்குதல் இலக்குகள் எனக் கூறப்படுகிறது.

வடபகுதியில் தனியார் வாகனங்களின் பாவனையைப் புலிகள் தடை செய்துள்ளதாகவும் இராணுவ முகாம்கள் மீது தாக்குதலை மேற்கொள்ளும்போது காயங்களுக்கு உட்படும் புலி வீரர்களை மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்ல வசதியாக இந்த வாகனங்களைப் பயன்படுத்தும் நோக்கிலேயே இந்த ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் "லங்காதீப" தெரிவிக்கிறது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

# கிளாலிப் போக்குவரத்து தடை செய்யப்படவில்லை

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மே 12

கிளாலிப்பாதையை பொது மக்களின் போக்குவரத்துக்கு மூடி, தடைசெய்வது என்று அரசாங்கம் முடிவு எதனையும் எடுக்கவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசியபோதே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

என்னும் கிளாலிப் பாதையைச் சட்ட பூர்வமாக அங்கீகரிப்பதில் சில பிரச்சினைகள் இருப்பதாகவும் ஆயினும் இது பற்றி தாம் கவனத்தில் எடுத்துக்கொள்வதாகவும் ஜனாதிபதி கூறினார்.

கடல்வலயத் தடையினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதி மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி குமாரதுங்க உறுதியளித்தார்.

(ஒ—4)

## இனிமூளும் யுத்தம் கடந்த காலத்தில் நடந்ததைவிட மோசமாக இருக்கும்

### தெற்கில் இனக்கலவரமும் வெடிக்கலாம்

கொழும்பு, மே 12

விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிட அரச படைகள் தயாராகி வருகின்றன என்றும்—

இனி மூளும் போர் கடந்த 10 ஆண்டுகளில் நடந்ததைவிட மிக மோசமானதாக அமையும் என்றும்—

அதன் காரணமாக தெற்கில் இனக்கலவரம் வெடிக்கவாய்ப்பு உள்ளது என்றும்—

ஜேர்மன் வானொலியில் அதன் கொழும்புச் செய்தியாளர் லூசியன் ராஜகருணநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை எதிர்கொள்ளும் வகையில் மும்முரமான ராஜதந்திர நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதாகவும் ஜேர்மன் வானொலிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஆயுத மற்றும் இராணுவ ஆலோசனை போன்ற உதவிகளைப் பெறும் நோக்கில் அரச ராஜதந்திர நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டது. (ஒ 3)

## இலங்கைக்கு இந்தியப்படை அனுப்ப கோருகிறார் சுப்பிரமணிய சுவாமி

### பிரபாவை பிடிக்க இஸ்ரேல் உதவி பெறவேண்டுமாம்

புதுடில்லி, மே 12

ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக இந்தியப் படையை அங்கு அனுப்பி வைக்குமாறு டாக்டர் சுப்பிரமணியசுவாமி இந்திய அரசைக் கோரியுள்ளார்.

இவ்வாறு புதுடில்லியில் வெளியான பி. ரி. ஐ. அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது

இந்தியாவின் அரசியல் தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணிய சுவாமியின் கோரிக்கை தொடர்பாக இந்திய அரசு என்ன முடிவு எடுத்துள்ளது என்பது குறித்து அந்த அறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதற்கிடையில் —

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைது செய்வதற்கு அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஏனைய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென டாக்டர் சுப்பிரமணிய சுவாமி புதுடில்லி அரசைக் கோரியுள்ளதாக "திவயின" சிங்கள நாளிதழ் தெரிவிக்கிறது.

பிராந்தியத்திலிருந்து பயங்கரவாதத்தை ஒழிப்பது தொடர்பாக 'சார்க்' அமைப்பின் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க இந்த உதவியை வெளிநாடுகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காட்டுப்புளியங்குளம் தாக்குதலில் இறந்த படையினர் 20 க்கு அதிகம்

### 10 நிமிட தாக்குதலில் பொலீஸ் நிலையம் அழிப்பு

யாழ்ப்பாணம், மே 12

வவுனியா காட்டுப் புளியங்குளத்தில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ — பொலீஸ் நிலையம் மீது நேற்று முன்தினம் [illegible] தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினர், பொலீஸாரினதும் எண்ணிக்கை 20 க்கும் அதிகம் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அதிரடித் தாக்குதலில் [illegible] ஒரு படையினர் கொல்லப்பட்டதாகவும் இரு பொலீஸார் காணாமற்போனதாகவும் ஆறுபேர் காயமடைந்ததாகவும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

தாக்குதலுக்கு உள்ளான இராணுவ — பொலீஸ் நிலையம் வவுனியா – திருகோண

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இசைக் கலைமணி
க கண்ணதாஸன்
அவர்களின் மாணவன்
செல்வன்

## சண்முகநாதன் சபேசன்

அவர்களின்

# மிருதங்க அரங்கேற்றம்



இடம்:
இளங்கலைஞர் மன்ற கலாமண்டபம்
நல்லூர்

காலம்:
இன்று (12 – 05 – 1995)
பிற்பகல் 3-30 மணி

தலைவர்: வைத்திய கலாநிதி
து. வி. ஜெயகுலராஜா

✶ இசையரங்கு ✶

சங்கீத பூஷணம்
திரு. பொன். சுந்தரலிங்கம் — பாட்டு
இசைஞான திலகம்
திரு. உ. இராதாகிருஷ்ணன் — வயலின்
செல்வன் சண்முகநாதன் சபேசன் — மிருதங்கம்
சங்கீதரெத்தினம்
திரு. மா. சிதம்பரநாதன் — கெஞ்சிரா
வித்துவான் செல்வன் ப. ரதிருபன் — கடம்
வித்துவான் திரு. எஸ். ராஜா — முகர்சிங்
கலைஞர்
திரு. என். சண்முகலிங்கம் — தம்புரா

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

திருமதி கா. சண்முகநாதன்,
227, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்
(36608)

---

யாழ். வண் - கிழக்கு, கலட்டி

## எச்சாட்டி மஹாமாரியம்பாள் தேவஸ்தானம்

மகாசபைக்கு அங்கத்தவர்களை

## சேர்த்தல் - 1995/96

மேற்படி ஆலய மகாசபைக்கு அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் அம்மன் வெளிஉலா வருகின்ற பரப்பிற்குள் வசிக்கும் சைவர்கள் எவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம். ஆயுட் சந்தா ரூபா 1,000/- வருடசந்தா ரூபா 100/- பழைய மகா சபை அங்கத்தவர்களும் தமது அங்கத்துவத்தைப் புதிப்பித்துக் கொள்ளல் வேண்டும். ஏற்கனவே ஆலய நிர்வாகத்தில் ஒழுங்கீனங்கள் செய்தவர்கள் தவிர்க்கப் படுவார்கள் ரூபா 10/- செலுத்தி, ஆலயப் பணி மனையில் பெறுகின்ற அங்கத்துவப் படிவத்தில் நிரப்பி 20-06-1995 க்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கலாநிதி. க. குணராசா
ஆலய பரிபாலன சபை. சார்பில்
தலைவர்.

(36606)

---

## அச்சுக்கோர்ப்பாளர் உடன் தேவை

தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சுக்கோர்ப்பதில் திறமையுள்ளவர்கள் நேரில் சமுகம் கொடுக்கவும். அனுபவத்திற்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.

முகாமையாளர்,
A·C·M· PRESS,
தென் இந்திய திருச்சபை,
வட்டுக்கோட்டை.

[சி/1373]

---

## வாழ்த்துகிறோம்

அல்வாய் மனோகர கானசபாவினரால்
"கலை மகிழ்நன்"
பட்டமும், விருதும் வழங்கி பாராட்டப்பெற்ற



திரு. வே. க. பாலசிங்கம்
அவர்களை வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
க. பவுண்ராசா, ஐ. வரதராஜா,
பெ. வரதன், இ. வைகுந்தன்,
வே. அருட்செல்வன்,
இ. பாரதிதாசன் (பொசி)
(36607) நா. சுகுணதாசன், குஞ்சு.

---

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரம

## வெள்ளிவிழா நிகழ்வுகள்

இன்று **12-05-95** வெள்ளிக்கிழமை
யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி நூலகத்துக்கு நன்கொடை (ரூ. 5,000/-)வழங்குதல்.

**14-05-95** ஞாயிறு
(காலை 8-30மணி முதல் நண்பகல் 12-30மணிவரை)

### திருமுறை விழா

சிறப்பு நிகழ்ச்சிகள்

சொற்பொழிவு: திருவாசகத்தில் தேன்
திரு. சி. வேலாயுதம்

பண்ணிசை:
திரு. நா. மு. வி. நவரத்தினம்
(தமிழ் இசைப்புலம். இராமநாதன் நுண்கலைப் பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

செயலாளர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்.
பருத்தித்துறை. (சி/1199)

---

## பத்தாம் ஆண்டு நினைவுதினம்



திருமதி
### உருக்குமணி இராசரத்தினம்
(இளைப்பாறிய ஆசிரியை, வேலணை)

தோற்றம்: 15 – 06 – 1914
மறைவு: 02 – 05 – 1985
திதி நாள்: 12 – 05 – 1995

அஞ்சலி விருத்தம்

பத்தாண்டு பிரிந்திட்ட நினைவு நாளிற்
பணிசெய்த பகிர்வுகளை எண்ணும் போது
அத்தனையும் மனத்திரையில் அலையாய் மோத
ஆசிரியை உருக்குமணி வாழ்ந்த காலச்
சித்துகளை மருமக்கள், மக்கள், பேரர்,
சேர்ந்தயலார் ஊரவர்கள் சிந்திக்கிறார்
உத்தமியும் அமரராய் உயர்ந்துவிட்டார்
ஒருங்கிணைந்தே உய்திபெறப் பிரார்த்திப்போமே.

உறவினர், நண்பர்களை நிகழ்ச்சிகளிற் பங்குபற்ற அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சார்பில்
வைத்தியர் சி. இராசரத்தினம் ஜே. பி.
(கணவர்)
(ஓய்வு பெற்ற அதிபர்)
திரு. திருமதி இரா. சிவசந்திரன்
[மகன், மருமகன்]
[சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்]

07, சயந்தசிறீ ஒழுங்கை (இரத்தினம் ஒழுங்கை),
யாழ் [illegible]
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (36694)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

### கும்பாபிஷேகம்

வலிகாமம் தெற்கு, மே. 12
சுந்தரோடை அருள்மிகு அருளானந்த விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன சம்புரோக்ஷண மஹாகும்பாபிஷேக விழா இன்று காலை 7 மணிக்கு நடைபெற உள்ளது.
கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ஐ-145)

### புனர்வாழ்வு கழகத்தின் அன்பளிப்பு

வலிகாமம் மேற்கு, மே 12
வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு படுக்கை விரிப்புகளும், பாய்களும் இலவசமாக வழங்கப் படவுள்ளன.
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வசிக்கின்ற காரைநகர் பகுதி மக்களைத் தவிர்ந்த ஏனைய பகுதி இடம் பெயர்ந்த மக்களுக்கு விநியோகிப்பதற்கு 850 பாய்களையும் 850 படுக்கை விரிப்புக்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

### மலேரியா காய்ச்சலுக்கு மாணவி பலி

தென்மராட்சி, மே 12
மூளை மலேரியாக் காய்ச்சலுக்கு பாடசாலை மாணவி பலியான சம்பவம் கடந்த முதலாம் திகதி எழுதுமட்டு வாழில் இடம் பெற்றது.
எழுமட்டுவாழ் நாகர் கோயில் வீதியைச் சேர்ந்த வ. புவனா (வயது 17) என்பவரே மரணமானவர் ஆவார். (க-117)

### உதவிப்பணம்

சண்டிலிப்பாய், மே 12
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான மார்ச்மாத கொடுப்பனவுகள் இப்பிரிவிலுள்ள தபால் அலுவலகங்களூடாக வழங்கப்பட்டு வருகின்றன. (க-14-135)

### கோட்டா ரீதியாக கப்பலில் பொருள்கள்

யாழ்ப்பாணம், மே12
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த முறை கூட்டுறவுக் கோட்டா ரீதியாக தங்களுக்குத் தேவையான பொருள்களை கப்பல் மூலம் தருவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.
யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாகத் தங்களுக்குத் தேவையான பொருள்களை இதுவரைத் தருவித்து வந்த பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் சமாசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை அடுத்து இத்தடவை கோட்டா ரீதியாக பொருள்களைத் தருவிப்பதென முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப் பட்டது. (க-4)

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், மே 12
பலாலி ஆசிரியர் கலாசாலையில் "ரஸெப்" கல்வி நெறியை தொடர்ந்து ரஸெப் —94 தேர்வுக்கு தோற்றிய வர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறும். (க-14)

### சீன அரசு விருப்பம்

பீக்கிங், மே. 12
இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் பட வேண்டும் என்று சீன அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. [ஐ 4]

### கடும் காற்றினால் பெரும் சேதம்

வல்வெட்டித்துறை, மே 12
கடந்த 8ஆம் திகதி நண்பகலுக்கு சற்றுமுன் ஏற்பட்ட கடும் காற்றினால் வடமராட்சியில் பல்வேறு இடங்களிலும் பனை, தென்னை மரங்கள் முறிந்து வீழ்ந்தன.
நீர்வேலி, ஆவரங்கால், புத்தூர்ப் பகுதிகளில் பெருமளவில் குலைகளுடன் கூடிய வாழைகள் முறிந்து விழுந்தன. (க-155)

---

குரும்பசிட்டி சன்மார்க்கசபை
ஆதரவில்
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன
வெளியீடான

திரு. மு. கந்தசாமி அவர்களின்

## வேம்பின் பயன்கள்

## நூல் அறிமுக விழா

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்- மருதனார்மடம்
காலம்: 13 05-1995 சனிக்கிழமை
காலை 9. 00 மணி
தலைவர்: திரு. தி. ஞானநந்தன் அவர்கள்
(தலைவர் சன்மார்க்க சபை)

வாழ்த்துரைகள்:–
தேசாபிமானி, கலாநிதி க. கனகராஜா
லயன். வை. இராசையா
(தலைவர் சுன்னாகம், லயன்ஸ் கழகம்)

அறிமுகவுரை:
திரு. பொன். பாலகுமார்

மதிப்பீட்டுரைகள்:
திரு. த குகதாசன்
(அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்)

திரு. பி. சிவநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர் பொருளியற்துறை யாழ். பல்கலைக்கழகம்)

திரு. முத்து விஜயராகவன்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
சன்மார்க்கசபை

விழா சிறப்புற வாழ்த்துவோர்:-
யாழ்ப்பாணக் கல்லூரி
விவசாய நிறுவன உத்தியோகத்தர்கள்
(சி/1204)

---

பூவாய் உதிர்ந்தவளின்

## 31 ஆம் நாள் நினைவுக்கு



செல்வி
### சீதாலட்சுமி சுப்பிரமணியம்

மலர்வு 13 - 08 - 1968
உதிர்வு 12 - 04 - 1995

சீதாலக்ஷ்சுமி

உன் நினைவுச் சிதறல்கள்
முள்ளாய்க் குத்துகின்றன
தென்றலை உன் வாழ்க்கையில்
வீசச் செய்வதற்குத்
தேசமெலாம் திரிந்தோம்,
நீயோ,
புயலை எம் மனங்களில் உருவாக்கிப்
பூவாய் உதிர்ந்து விட்டாய்.

கண்டா வாழ்வின் கனவுகள்
உன்விழிகளில் மலர்ந்தன
இன்று எமது ஈரவிழிகளில்
நீயே கனவாகிவிட்டாய்.

இல்லற வாழ்வில் அடியெடுத்துவைக்க
உன்னை அழைத்துச் சென்றோம்,
நீயோ, மறுஉலக வாழ்வுக்கே [illegible]
அடியெடுத்து வைத்துவிட்டாய்.

வெளிநாட்டில் அமையும் உன்
திருமணக் கோலத்தை
இங்கேயே நாம் கண்டது
இதற்காகத் தானா?

எமது உள்ளக் கடலின்
துன்ப அலையோசைகள்
ஓயும் நாள் உண்டா?

உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

46/1 A, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (36611)

# சின்னஞ் சிறு விளம்பரம்

**வர்த்தகமும் நிதியும்**

வர்த்தகமும் நிதியும் Past Paper 1990 — 1994 வரை [1991—1992 Special] மொத்தம் 7 Exams Paper ஆக்கம். E. செல்வநாயகம் Royal College விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.
[சி-1369]

**PASCAL CLASS**

உயர்கல்வியை தொடரும் மாணவர்களுக்காக, 14-5-1995 அன்று பிரத்தியேக Pascal வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகளுக்கு: K. Vignesh. North Ceylon Technical Institute, 14, St. Peters lane, Jaffna. (சி-1193)

**SPOKEN ENGLISH**

Spoken English, Grammar and Literature கற்பிக்கப்படுகிறது. V N. Kandasamy A. I. B. Part I [London], Inter (London) /Dip - in English] இலக்கம் 87. திருநெல்வேலி றோட். (றயில் கடவைக்குச் சமீபமாக) கொக்குவில். (36599)

**பணி தேவை**

வீட்டில சிறு பிள்ளையைப் பராமரிக்கக் கூடிய அல்லது சமைத்தும் பிள்ளையைப் பராமரிக்கக் கூடிய பெண் தேவை. சம்பளம் இதர வசதிகள் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: மதுரம் உணவகம் கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி. யாழ்ப்பாணம். [36597]

**மணமகன் தேவை**

செவ்வாய்க் குற்றம் இல்லாத 34 வயதுடைய ஆசிரியருக்கு (கலைச் சிறப்பு) தகுதியான பட்டதாரி மணமகனைத் தேடுகின்றனர். 24 5-95 வரையும் தொடர்பு வரவேற்கப்படும் விளம்பரதாரர் இல. 791. மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
[36581]

**துர்க்கா திருமண சேவை**

பணமக்கள் இருபாலாரும் உண்டு. தொடர்புகொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 'வளர்மதி இல்லம்', கே கே. எஸ். றோட், மல்லாகம். [8346]

**காணவில்லை**

10 5-95 அன்று காங்கேசன்துறை வீதியூடாக கொக்குவிலில் இருந்து ஏழாலை செல்லும் வழியில் விசேட பாவனைக்குரிய மூக்குக் கண்ணாடி கூட்டுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 61, புகையிரத வீதி. கொக்குவில் என்ற விலாசத்தில் சந்திக்கவுமாறு வேண்டுகின்றேன். சன்மானம் வழங்கப்படும். (36603)

## அரச அதிபருக்கு மேலதிக பதவி

கொழும்பு, மே 12

அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் சகல மாவட்ட அரசாங்க அதிபர்களும் பொது நிர்வாக அமைச்சின் மேலதிக செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதற்கான நியமனக் கடிதங்கள் சகல மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நியமனம் 1995ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது. (க-4)

**C. C. A.**
**கலை, வர்த்தக கல்லூரி**
*யாழ்ப்பாணம்.*

**G A.Q. 1995**
யாழ்ப்பாணம்

★ பொருளியல் ★
திரு உதயன்
விரிவுரைகள் நடைபெறுகின்றன
செவ்., புதன்., வியா.
(காலை 6-30)
[சி-1190]

---

## பிரத்தியேக வகுப்புக்கள்

**A/L 96, 97** சனி-ஞாயிறு வகுப்புக்கள்

கணக்கியல் — உருத்திரசிங்கம்
வர்த்தகம் — சத்தியதாசன்

**ஆரம்பம்: 13 - 05 - 1995**
சனிக்கிழமை

A/L 96 — 3 - 4   A/L 96 — 4 - 5
A/L 97 — 4 - 5   A/L 97 — 3 - 4

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
[சி-1378]

---

## A/L 96, 97

புவியியல்:
திரு. சண்

96 7 00 — 8 00
97 8-00 — 9-00

**ஆரம்பம்: 13-05-95**
சனி

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/1376)

---

## கீன் கல்வி நிலையம்

பலாலி வீதி, திருநெல்வேலி.

**A/L 97** கலை, வர்த்தகம்
புதிய பிரிவு

| ஆசிரியர்கள் | பாடங்கள் | நேரம சனி, ஞாயிறு |
|---|---|---|
| சேரன் | புவியியல் | 12 — 1 |
| காரை. செங்கா | இந்து நாகரிகம் | 1 — 2 |
| காரை. செங்கா | இந்து சமயம் | 2 — 3 |
| வரதன் | வர்த்தகம் | 2 — 3 |
| வரதராஜன் | பொருளியல் | 3 — 4 |
| சௌந்தி | கணக்கியல் | 4 — 5 |
| காரை செங்கா | தமிழ் | 4 — 5 |
| S S. மனோகரன் | அளவையியல் | 5 — 6 |

**ஆரம்பம்: 13 - 05 - 1995**
சனி

[சி-1171]

---

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
உடுவில் உப அலுவலகம்

## தாவடி இந்து மயானம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் கட்டுப்பாட்டின் கீழ் மேற்படி மயானத்தைப் பராமரிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும், பாவனையாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்குமாக அபிவிருத்திச் சபை யொன்றை அமைப்பதற்கான பொதுக் கூட்டமொன்று 20 - 05 - 1995 சனி கிழமை பி. ப. 3-30 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

மயானப் பாவனையாளர் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு -
பிரதேச சபை,
சுன்னாகம்.
10 05-95.
(சி-5796)

---

உ

## காயத்திரீ பீடத்தின் பிரார்த்தனாஞ்சலி

சமீபத்தில் தேவலோக பிராப்தியான மட்டுவில் வேதசிவாகம விற்பன்னர்

**சிவஸ்ரீ அ. சிவசாமி குருக்கள்**

அவர்களின் ஆத்மா ஈஸ்வர சாமீப்யமடைய பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்,
ஸ்ரீமசாஸ்தா குருகுல மாணவர்கள்.

(36601)

---

## கலை வர்த்தக கல்லூரி

**C·C·A.**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

**G. C. E A/L - 97**
புதிய பிரிவு

கலை வர்த்தக வகுப்புக்கள்
சனி, ஞாயிறு

எமது வழமையான ஆசிரியர் குழு

**ஆரம்பம்: 13 - 05 - 95**
காலை 8-00 மணி

- நிர்வாகி,
(சி/1192)

---

வலிகாமம் தெற்கு பிரதேச
கலை, கலாசாரப் பேரவை

## மாபெரும் கலை விழா

1ஆம் நாள் **13 — 05 — 1995**
சனிக்கிழமை

இடம்: வலி. தெற்கு பிரதேச சபை உடுவில் உப அலுவலகத் திறந்த வெளி அரங்கு

*தலைவர்:* திரு. ஆ. மகாலிங்கம்
(பிரதேச செயலர், வலி. தெற்கு)

*பிரதம விருந்தினர்:*
திரு. க. பொன்னம்பலம்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

*சிறப்பு விருந்தினர்கள்:*
திரு. சு இரத்தினராசா
(பிரதிக்கல்விப்பணிப்பாளர், மருதனார்மடம்)
திரு. கு. திருக்குமரன்
(அரசியல் துறைப் பொறுப்பாளர், வலிகாமம்)

### ★ நிகழ்ச்சி நிரல் ★

பி.ப 5-00 மணி பூசை வழிபாடு: அருள்மிகு ஸ்ரீபல்லப்ப வைரவர் ஆலயம் மருதனார் மடம்.

5-15 மணி மங்களவிளக்கேற்றல்:
திரு. பொ. நடராசா
(அதிபர், அண்ணா தொழிலகம், இணுவில்)
திரு ந. அரசரத்தினம்
(அதிபர், நாகம்ஸ், சுன்னாகம்)

5-20 மணி திறந்தவெளி அரங்கு திறத்தல்
(பிரதம விருந்தினர்)

5 30 மணி தேவாரம்
(சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, மாணவிகள்)

5-35 மணி மௌன அஞ்சலி

5 40 மணி மங்கள இசை; இணுவில் தவில் மேதை என். ஆர். சின்னராசாவின் புதல்வர்கள்
என் ஆர் எஸ் இரவீந்திரன் - சுதாகரன் குழுவினர்

6 30 மணி வரவேற்புரை;
திரு எஸ் கே. உதயசூரியன்
(தொழில் நுட்ப அலுவலர், உடுவில உப அலுவலகம்)

6-40 மணி "பண்ணும் பரதமும்"
(யாழ். பல்கலைக்கழக - இராமநாதன் நுண் கலைத்துறை)
தயாரிப்பு: திருமதி பத்மறஞ்சினி உமாசங்கர்
பாடல்; சங்கீத பூஷணம் ந வி. மு. நவரத்தினம்
(விரிவுரையாளர்)
வயலின்; திரு. எஸ். கோபிதாஸ்
(உதவி விரிவுரையாளர்)
மிருதங்கம்: திரு. க கண்ணதாசன்

7 30 மணி தலைமை உரை

7-40 மணி பிரதம விருந்தினர் உரை

7 55 மணி சிறப்பு விருந்தினர்கள் உரை

8-15 மணி நன்றி உரை:
திரு த தேவராஜன்
(உதவி திட்டமிடல் பணிப்பாளர்)

8 20 மணி பரத நாட்டியம்: கூட்டு நடனம்
(உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள்)

8 45 மணி தனி நடனம்
(இணுவில் மத்திய கல்லூரி மாணவர்)

9 00 மணி வயலின் சோலோ: இசை ஞான திலகம் ஆர் இராதாகிருஸ்ணன்,
மிருதங்கம்: திரு க கண்ணதாசன்,
வயலின்: திரு. எஸ். கோபிதாஸ்,
கடம்: திரு ச. வேல்மாறன்
மோர்சிங்: திரு. எஸ். இராஜு

10-00 மணி பிரபல பாடகர்
திரு எஸ் ஜி. சாந்தன்
திரு வி செல்வம் இணைந்து வழங்கும் 'சத்தியவான் சாவித்திரி'

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

வலி தெற்கு பிரதேச-
கலை கலாசாரப் பேரவை.

பிரதேச செயலகம்,
வலி தெற்கு,
உடுவில்
11 - 05 - 1995.

விளம்பர உதவி:
இ சுப்பிரமணியம்,
அன்பளிப்பு, அலங்காரப் பொருளகம்,
இல. 6, காங்கேசன் நெடுஞ்சாலை,
சுன்னாகம்.
(சி-1196)

---

அகில இலங்கை கம்பன் கழகத்தின்

# கம்பன் விழா - 1995

நான்காம் நாள் நிகழ்ச்சிகள்
**(12 - 05 - 1995)** வெள்ளிக்கிழமை

**காலை 9-30 மணி முதல்**

★ மங்கள விளக்கேற்றல்
திரு. சி. செ. சோமசுந்தரம் அவர்கள்
(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி)

★ கடவுள் வாழ்த்து
இசைப் பேரறிஞர்
திரு. கே. ஆர். நடராசா அவர்கள்

★ கம்பன் வாழ்த்து

★ வரவேற்புரை

★ தலைமையுரை
திரு. க. வை. தனேஸ்வரன் அவர்கள்
(ஓய்வுபெற்ற உப அதிபர், கனகரத்தினம் ம. ம. வி)

★ தொடக்கவுரை
கலைப்பேரரசு
ஏ. ரி. பொன்னுத்துரை B.A. அவர்கள்

★ வாழ்த்துரை
திரு. க. திருநாவுக்கரசு அவர்கள்
(அமைப்பாளர் வட இலங்கை சர்வோதயம்)

**சுழலும் சொற்போர்**

★ மையத்துறைபவர்
திரு. இ. ஜெயராஜ்

*பொருள்*

"அனுமனின் ஆற்றல்மிகு பேருரைகளில் தலையாயது,

ஏற்புரையல்ல, இராமலக்குவ வரவேற்புரையே!
திரு. இரா. செல்வவடிவேல்

வரவேற்புரையல்ல. சுக்கிரீவன் அறிவுரையே!
திரு தி. திருநந்தகுமார்

அறிவுரையல்ல, வாலியின் அறிமுகவுரையே!
பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை

அறிமுகவுரையல்ல, சீதை தேற்றவுரையே!
செல்வன் ஸ்ரீ. பிரசாந்தன்

தேற்றவுரையல்ல. இராவணன் முன் தூதுரையே!
திரு. ஆறு. திருமுருகன் B. A.

தூதுரையல்ல. இராமன் தெளிவுரையே!
திரு க. யோகநாதன்

தெளிவுரையல்ல, வீடணன் ஏற்புரையே!
திரு. த. சிவகுமாரன்

**மாலை 4-30 மணி முதல்**

★ மங்கள இசை
அளவெட்டி திரு. எஸ். சிதம்பரநாதன்
ஏ. எஸ். சுதந்திரன் குழுவினர்

★ மங்கள விளக்கேற்றல்
திரு. திருமதி த. இ. பாலசுந்தரம் அவர்கள்
(பாமினி என்ஜினியர்ஸ், கோண்டாவில்)

★ கடவுள் வாழ்த்து
சங்கீத வித்துவான்
செல்வி பிரசாந்தி இராமச்சந்திரன் அவர்கள்

★ கம்பன் வாழ்த்து

★ வரவேற்புரை

★ தலைமையுரை
கலாநிதி க. குணராசா அவர்கள்
(உதவி அரச அதிபர், யாழ்ப்பாணம்)

★ தொடக்கவுரை
திரு. செ. பத்மநாதன் B. A. அவர்கள்
(திட்டப்பணிப்பாளர், யாழ். செயலகம்)

★ வாழ்த்துரை
வைத்திய கலாநிதி வி. ஸ்ரீகாந்தா அவர்கள்
(பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்)

வைத்திய கலாநிதி
மு. க. முருகானந்தம் அவர்கள்

★ கம்பன் இசையமுது
சங்கீத பூஷணம்
எல். திலகநாயகம்போல் — பாட்டு
சங்கீத வித்துவான்
S. வெங்கடேஸ்வர சர்மா — வயலின்
மிருதங்க வித்துவான்
எஸ். பாலச்சந்திர சர்மா — மிருதங்கம்
மிருதங்க வித்துவான்
சதா வேல்மாறன் — கடம்

**இலக்கிய ஆணைக்குழு**

ஆணையாளர்கள்

திரு. க. சிவராமலிங்கம் B. A.
திரு. கோ. சி. வேலாயுதம்
வைத்திய கலாநிதி செ.சு நச்சினார்க்கினியன்

*பொருள்:*

"இலங்கையின் தலைமைப் பிரஜையெனும் தகுதி வழங்கப்பட வேண்டியது"

இராவணனுக்கே!
திரு தி. சிவதட்சணாமூர்த்தி B. A.
செல்வன் க. ஜெயநிதி

கும்பகர்ணனுக்கே!
திரு ஐ. நதிர்காமசேகரன்
செல்வி க. மாதவி B. A.

வீடணனுக்கே!
திரு. க. யோகநாதன்
செல்வி பா. டெய்சி கிருஷாந்தினி

இந்திரசித்தனுக்கே!
திரு த. நாகேஸ்வரன்
திருமதி செ. வேதவல்லி

[சி-1184]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில்

# முஸ்லிம்களின் புனித தலம் ஹஜ் திருநாளில் தீக்கிரை!

புதுடில்லி, மே. 12
முஸ்லிம்களின் புனித திருநாளான நேற்று அதிகாலை 2-30 மணியளவில் ஜம்மு காஷ்மீரில் ஸராரோ ஷரீப்பில் உள்ள ஷேக் நூருதீன் வலி புனித தலம் தீவிரவாதிகளினாலும், வெளிநாட்டு கூலிப்படையினராலும் தீக்கிரையாக்கப்பட்டது.

அருகில் இருந்த மசூதி ஒன்றும் மற்றும் சில வீடுகளும் இச்சம்பவத்தின் போது தீயில் எரிந்து நாசமாகின.

ஸராரோ ஷரீப் நகரில் மறைந்திருந்த வெளிநாட்டு கூலிப்படையினரும், தீவிரவாதிகளும் இந்தக் காட்டுமிராண்டித் தனமான செயலில் ஈடுபட்டதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

புனித தலத்தை நோக்கிச் செல்லும் சகல பாதைகளிலும் வெடிகுண்டுகளைப் புதைத்து வைத்த பின்னர் தீவிரவாதிகள் அதற்குத் தீ வைத்துள்ளனர்.

தீயை அணைப்பதற்குச் சென்ற தீயணைப்பு வாகனங்கள் மீது துப்பாக்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹஜ் பெருநாளில் புனித தலம் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் இந்தியா முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம்கள் கலவரமடைந்துள்ளதால் ஜம்மு காஷ்மீரில் பதற்றநிலை தோன்றியுள்ளது.

பலத்த பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாநிலத்தின் பெரும் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புனித தலம் தீக்கிரையாக்கப்பட்டதை பல அரசியல் தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

வெளிநாட்டு சக்திகளின் நாசகாரச் செயலை கண்டித்துள்ள பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மக்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுள்ளார். [ஐ-5]

## பயிர்ச்செய்கை கடன்

யாழ்ப்பாணம், மே 12
விவசாயத்தை மேம்படுத்தும் முகமாக வெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற பயிர்களை செய்கை பண்ணுவதற்கென வடமராட்சிக் கோட்டத்தைச் சேர்ந்த 126 விவசாயிகளுக்கு தமிழ் மறு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் 11 லட்சத்து 87 ஆயிரம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

நிறுவன கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியினரின் கிராமிய நிதியத்தின் ஊடாக கடந்த மாதம் வழங்கப்பட்ட இக் கடனுதவி மூலம் அப்பகுதி விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. [இ-5]

வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து

## கருத்து வெளியிடாமல் தமிழ் கட்சிகள் மௌனம்

வடக்குக் - கிழக்கில் தற்போது உருவாகியுள்ள நிலைமை குறித்து தமிழ் அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் தாங்கள் எடுத்துள்ள தீர்மானங்கள் குறித்து செய்தித் தொடர்பு சாதனங்களுக்கு கருத்து வெளியிடுவதில்லை என முடிவெடுத்துள்ளதாக கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு எஸ் தொண்டமான் தெரிவித்துள்ளார்

வடபகுதியின் தற்போதைய நிலைமை குறித்து தமிழ் அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் கடந்த 5ஆம் திகதி கலதாரி ஹோட்டலில் சந்தித்து கலந்துரையாடின. அக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து வினாவியபோது அமைச்சர் தொண்டமான் மேற்கண்டவாறு கூறியதாக "திவயின" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. [ஐ-10]

## எல்லைக் கிராமங்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு மே 12
வவுனியா — அநுராதபுரம் எல்லைக்கு அருகே விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தியதை அடுத்து எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தாக்குதலில் இருந்து வடக்கு வவுனியா எல்லையோர மக்களுக்கு முழுப்பாதுகாப்பு வழங்க "புளொட்" அமைப்பு முன்வந்துள்ளதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது. [ஐ-3]

## சிறிய ரக விமானத்தை பலாலியில் இறக்க முயற்சி

கொழும்பு, மே. 12
சிறியரக விமானம் ஒன்றை பலாலியில் தரையிறக்க முயற்சியை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு குழு விமானப் படைத் தளபதிக்கு கட்டளையிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பலாலி தளத்தினுள் 8 ஆயிரம் துருப்புக்கள் விமான கடல் வழித் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் முடங்கியுள்ளனர். இந்த 8 ஆயிரம் துருப்புக்களுக்கும் உணவு மருந்து மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியை அடுத்தே சிறிய ரக விமானத்தை தரையிறக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பலாலி தளத்தைத் தவிர கடற்படை விநியோகத்தை நம்பி வட மாகாணத்தில் ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, தீவகம், பூநகரி மன்னார் பெருநிலப்பரப்பின் சிறு பகுதியிலுள்ள முகாம், மன்னார்த் தீவு, முல்லைத் தீவு ஆகிய முகாம்கள் உள்ளன.

யாழ் குடாநாட்டில் உள்ள பலாலி, தீவகம் ஆனையிறவு, வெற்றிலைக்கேணி முகாம்களில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதான நீர் தாங்கியினுள் சடலம்! கொழும்பு நீர் விநியோகம் துண்டிப்பு!!

அம்பத்தளையில் உள்ள நீர் விநியோகத் தாங்கியில் சடலம் ஒன்று காணப்பட்டதை அடுத்து கொழும்பு மாநகரின் பெரும்பாகத்துக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

தாங்கியில் இருந்த சடலம் அப்புறப்படுத்தப்பட்டு நீர் முழுவதும் வெளியேற்றப்பட்டதாக நீர் விநியோக வடிகால் அமைப்பு சபை தெரிவித்துள்ளது.

பெருந்தொகையான பிளீச்சிங் பவுடர் பயன்படுத்தப்பட்டு தாங்கி சுத்தப்படுத்தப்பட்டுள்ளதாகவும், புதிதாக நீர் நிரப்பப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

அம்பத்தளை சுத்திகரிப்பு ஆலையில் உள்ள தாங்கிகளில் இருந்து நாளொன்றுக்கு 9 கோடி கலன் நீர் விநியோகிக்கப்படுகிறது.

முக்கியமாக கொழும்பு பெரும்பாக பகுதிக்கு இவற்றில் இருந்தே நீர் விநியோகிக்கப்படுகிறது.

தாங்கியில் அசுத்தத்தை நீக்குவதற்காக ஒரு வார கால விசேட சுத்திகரிப்பு பணி மேற்கொள்ளப்படுவதாக வீடமைப்பு நிர்மாண பொது வசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்தார். [ஐ-5]

கொழும்பு மாநகர குடியிருப்பாளர்கள்

## அடையாள அட்டை, ஆவணங்களை தம்முடன் வைத்திருக்க அறிவுறுத்து

கொழும்பு, மே 12
கொழும்பில் தற்போது இடம்பெற்று வரும் தேடுதல் நடவடிக்கைகளின் போது ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் வகையில் ஒவ்வொருவரும் அடையாள அட்டை தாம் தங்கியிருக்கும் இடம் என்பவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களை தம்முடன் எந்நேரமும் வைத்திருக்கும் படியும் விசாரணைகளின் போதுவீண் பீதி அடையாமல் நிதானமாக பதில் அளிக்குமாறும் பொலீஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரின் உறவினரோ நண்பர்களோ "மேர்ஜ் இன்போம்" என்ற அமைப்புடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளவும் ஏற்படும் சிக்கல்களை தீர்த்துக்கொள்ளவும் முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

## கொழும்பு ஆஸ்பத்திரியில் மட்டு. வாசி மர்ம மரணம்

கொழும்பு, மே. 12
கொழும்புப் பெரிய ஆஸ்பத்திரியின் பல் வைத்திய நிலையத்தில் கடந்த 3ஆம் திகதி 27 வயதுடைய தமிழர் ஒருவர் மலசல கூடத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

அவர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலிருந்து முகத்தில் ஏற்பட்ட காயத்துக்குச் சிகிச்சை செய்வதற்காக கொழும்புப் பல்வைத்திய நிலையத்திற்கு மாற்றப்பட்டார்.

கூரை வளை ஒன்றில் இரண்டு சாரங்களைஇணைத்துக் கட்டி அந்த நோயாளி தற்கொலை செய்துள்ளார். என்று கூறப்படுகிறது.

ஆனால் இது ஒரு மர்ம மாகவே உள்ளது

ஆஸ்பத்திரி வட்டாரங்கள் இந்தச் சம்பவம் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை

இறந்தவர் மட்டக்களப்பு நாவுட்டியைச் சேர்ந்த நல்லையா யோகேந்திரன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். [ஏ]

## கொழும்புக்கு வெளியே உபநகரங்கள்

கொழும்பு, மே 12
"தலைநகரான கொழும்புக்கு வெளியே உப நகரங்களையும் கைத்தொழில் பேட்டைகளையும் நிறுவுவதன் மூலம் கொழும்பு நகரில் அதிகரித்து வரும் சனத்தொகை நெரிசலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது."

இது அரசாங்கத்தின் நீண்டகாலக்குறிக்கோள்களில் ஒன்றாகும் என்று வீடமைப்பு நிர்மாணத்துறை பொது வசதிகள் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் கென்யாவின் தலைநகர் நைரோபியில் நடைபெற்ற ஐ நாவின் மானிட குடியிருப்பு மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சர் கலந்து கொண்ட போதே இதனைத் தெரிவித்து இருந்தார். (ஏ-14

# இரண்டாம் உலக யுத்தத்தின் 50 ஆவது ஆண்டு நினைவுகள்

1945—மே 7ஆம் நாள்
இந்த நூற்றாண்டின் இரு பெரும் யுத்தங்களில் ஒன்றான இரண்டாம் உலக யுத்தத்தின் சூத்திரதாரியான ஜேர்மன் நேச நாட்டுப் படைகளிடம் சரணடைய அந்த யுத்தம் முடிவுக்கு வந்த நாள்.

தற்போது 1995 மே மாதம். உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளில் இரண்டாம் உலக யுத்தத்தின் 50 ஆண்டு நினைவு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இந்த வாரம் ரஷ்யாவில் நடைபெற்ற நினைவு நிகழ்வுகளில் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இன்று உலகில் உள்ள அநேகர் இரண்டாம் உலக யுத்த காலத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்; வரலாற்று நூல்கள் வாயிலாகவே அதனை தெரிந்து கொண்டவர்கள்.

நானும் அநேகமாக நீங்களும் இந்த வகையினரே

எனவே வரலாற்றுப் புத்தகத்தைப் புரட்டி, சற்று பின் நோக்கிப் பயணமாவோம்.

1939ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் முதலாம் நாள், வெள்ளிக்கிழமை இரண்டாம் உலகமகா யுத்தம் ஆரம்பமானது.

6 ஆண்டுகள் நீடித்த அந்த கொடிய யுத்தம் சுமார் 4 கோடியே 50 லட்சம் பேரை தனது அகோரப் பசிக்கு இரையாக்கியது.

ஜேர்மனி மீது நேசநாட்டுப் படைகள் தாக்குதல் நடத்தி, பேர்ளின் துறைமுகத்தை கைப்பற்றும் வரை இந்த யுத்தம் தொடர்ந்தது.

### அழியாத தடயங்கள்

இரண்டாம் உலக யுத்தத்தின் நாசகார விளைவுகள் முதலாம் உலகமகா யுத்தத்தின் பாதக விளைவுகளை விட பல மடங்கு அதிகமாக இருந்தன; அழியாத—அழிக்க முடியாத — அழிவுத்தடயங்கள் பலவற்றை விட்டுச் சென்றன.

முதல் முறையாக அதிவேக குண்டு வீச்சு விமானங்கள் நவீன போர் டாங்கிகள், நீர் மூழ்கிகள் என்பவற்றை மட்டுமன்றி அணு குண்டையும் இந்த யுத்தம் உலகுக்கு அறிமுகப்படுத்தியது.

அண்மையில் ஜப்பானில் 12பேரை பலிகொண்டு சுமார் 5ஆயிரம் பேரை பல்வேறு நரம்பியல் தாக்கங்களுக்கு உள்ளாக்கிய "ஸரின்" என்ற விஷவாயுவும் ஹிட்லரின் விஞ்ஞானிகளால் இந்த யுத்தத்தின் போதே கண்டு பிடிக்கப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தம் நாகரிக உலகம் தனை குனியக் கூடிய பல கீழ்த்தரமான அழிவுகளை ஏற்படுத்தியது

அமெரிக்கா தனது அணு குண்டுப் பரீட்சைக் களமாக ஜப்பானைத் தேர்ந்தெடுத்து அங்கு அணுகுண்டுகளை வீசியதும் இத் தகையதே.

இவ்வாறு அழிவுப் பாதையை விசாலமாக்கிய இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்த பின் இன்று வரை மூன்றாம் உலக யுத்தம் என்ற ஒன்று ஏற்பட வில்லை.

மூன்றாம் உலக யுத்தம்

எண்பதுகளில் மூன்றாம் உலக யுத்தம் ஒன்று வெடிக்கக் கூடிய மையமாக மத்திய கிழக்கு பிராந்தியம் தோற்றமளித்தது; இன்று அந்த அபாயம் தவிர்க்கப்பட்டு விட்டது.

எவ்வாறெனினும் இந்த நூற்றாண்டு முடிய இன்னும் கிட்டத்தட்ட நான்கரை வருடங்களே உள்ளன. எனவே இந்த நூற்றாண்டில் இனி ஒரு உலக மகா யுத்தம் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் பெரும்பாலும் இல்லை. எனவே, இந்த நூற்றாண்டின் இறுதி உலக யுத்தமாக இரண்டாம் உலக யுத்தமே திகழ்கிறது.

முதலாம் உலக யுத்த முடிவில், உலகில் உள்ள சமாதான விரும்பிகளால் தோற்றுவிக்கப்பட்ட உலக மகா சபையால், இரண்டாவது உலக மகா யுத்தத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இரண்டாம் உலக யுத்தம் மூண்டது.

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் மீண்டும் இத்தகைய யுத்தங்கள் உலகில் ஏற்படக் கூடாது, ஏற்பட இடமளிக்கக் கூடாது என்ற ஒரே முக்கிய நோக்கோடு ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டது.

பல சர்வதேச நெருக்கடிகளைத் தீர்த்து, இந்தச்சபை, மூன்றாம் உலக யுத்தத்துக்காக ஆங்காங்கே கருக்கட்டும் போர் மேகங்களை, கருக்கலைப்புச்செய்து வருகின்றது.

போரின் பின்னணி

உலகெங்கும் நிலவிய மன்னராட்சி மற்றும் நிலப் பிரபுத்துவமுறைகள், நலிந்தோரை வலிமை மிக்கோர் அடக்கி ஆளும் ஏகபோகம் என்பன முதலாம் உலக யுத்தத்தை தோற்றுவித்தன.

முதலாம் உலக யுத்தத்தில் ஜேர்மனியர்கள் பெற்ற தோல்வி ஏற்படுத்திய அவமான வடுக்கள், அவர்களின் உள்ளங்களில் ஆறாத ரணங்களாக புரையோடிக் கிடந்தன.

இந்த அவமான உணர்ச்சியை களைந்தெறியும் ஜேர்மனியர்களின் வெறியே, அங்கு ஒரு ஹிட்லரை தோற்றுவித்து. ஜேர்மனியர்களை அவன்பால் ஈர்த்தது.

உலக அரங்கில் தாம் முன்னணிக்கு வர வேண்டும் தாம் இழந்த நிலப்பரபு மீண்டும் தம் வசமாக வேண்டும் என்ற ஜேர்மனியரின் ஆவேசகரமான உந்துதல் நாஜிக்கட்சியின் புதிய தோற்றத்திற்கு வழிவகுத்தது.

இந்தக் கொள்கைக் குரலுடனேயே நாஜிக்கட்சியை ஹிட்லர் ஆரம்பித்தார்.

யூதர்கள் மீதான பழிவாங்கல்

உலகம் தன்வசமாக வேண்டும் என்ற தனது திட்டத்திற்கு யூதர்கள் இடைஞ்சலாக இருப்பதாக கருதிய ஹிட்லர் யூதஇனத்தை உலகில் இருந்து பூண்டோடு அழிக்க புறப்பட்டது இரண்டாம் உலக யுத்தத்துக்கு வழி வகுத்தது.

ஹிட்லரின் உத்தரவின்படி ஜேர்மனி இராணுவம் 60 லட்சத்துக்கும் மேற்பட்ட யூதர்களைக் கொன்று குவித்தது

நோயாளர்கள், குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர் என்ற எதுவிதவேறுபாடுகளும் இன்றி யூதர்கள் கொல்லப் பட்டனர்.

பெரும் எண்ணிக்கையானோர் முகாம்களில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். மிருகங்களைப் போல் நடத்தப்பட்டனர்.

யுத்த தந்திரங்களில் கைதேர்ந்த ஹிட்லர் நன்கு திட்டமிட்டு முதலில் போலந்தையும் பின்னர் ஒல்லாந்தையும் கைப்பற்றினார்.

முசோலினியின் தோற்றம்

1940 இல் நோர்வேயும், டென்மார்க்கும் ஜேர்மன் வசமாகின. இறுதியில் பிரான்சும் வீழ்ந்தது.

அடுத்து இங்கிலந்தின் மீது ஹிட்லர் குறிவைத்தார்! இங்கிலாந்தை கைப்பற்றி விட்டால் உலகின் அரைவாசியை தன் காலடியில் கொண்டு வந்து விடலாம் என அவர் நினைத்தார்,

அச்சமயத்தில் ஹிட்லருக்கு தோள் கொடுத்து போரில் இறங்கினார் இத்தாலிய சர்வாதிகாரியான முசோலினி

உலகில் பாஸிஸக் கோட்பாட்டை அறிமுகம் செய்தவர் முசோலினி.

ஹிட்லருக்குத் துணையாக முசோலினி போரில் இறங்கியதும் ஜப்பானும் போர்ப் பிரகடனம் செய்துசீனாவைத் தாக்கத் தொடங்கியது.

சீனாவின் பெரும்பகுதியையும் சிங்கப்பூர், பர்மா, ஹொங்கொங் போன்ற தூர கிழக்கு நாடுகளையும் ஜப்பான் கைப்பற்றியது.

இலங்கையில் நடந்த அனர்த்தம்

இலங்கையில் முதன் முறையாக விமானக் குண்டு வீச்சு இடம்பெற்றது இரண்டாம் உலக யுத்தத்தின் போது தான்.

ஜேர்மனி சரணடைந்த பிறகும் போரில் ஈடுபட்ட ஜப்பான்முதலில் இலங்கையை கைப்பற்றி அதனைத் தளமாகப் பயன்படுத்தி இந்தியாவை ஆக்கிரமிக்க திட்டமிட்டது.

அத் திட்டத்தின் படி 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை மீது தனது விமானப்படை மூலம் குண்டு மழை பொழிந்தது

முதலாவது தாக்குதல் ஏப்ரல் 5 ஆம்திகதி கொழும்பிலும் இரண்டாவது தாக்குதல் ஏப்ரல்9 ஆம் திகதி திருமலையிலும் நடத்தப்பட்டது

யுத்தம் என்றால் என்ன என்பதை திரைப்படங்களிலும், நாவல்களிலும் அதுவரை அறிந்திருந்த இலங்கை மக்களை ஜப்பானின் குண்டு வீச்சு குலை நடுங்க வைத்தது.

முதல் குண்டு வீச்சு ஏற்படுத்திய பீதியின் ஞாபகங்களை ஐம்பது ஆண்டுகளுக்குப்பின் இலங்கையர்கள் பலரும் இப்போது நினைவு கூருகிறார்கள்.

ஜப்பானின் குண்டுவீச்சுக்கு அஞ்சி நகரங்களை விட்டு அகப்பட்டதை எடுத்துக் கொண்டு வெளியேறியதை—

தாக்குதல்களில் இருந்து தப்ப பதுங்கு குழிகளை அமைத்ததை—

குண்டுகள் விழுந்து வெடிக்காது எனக் கருதி மணல் பாங்கான இடங்களை நாடிச் சென்றதை இலங்கை மக்கள் பலர் இப்போதும் மறந்திருக்க மாட்டார்கள்.

எனினும் குண்டு வெடிப்புகளும் குண்டு வீச்சுக்களும் சர்வசாதாரண நிகழ்ச்சிகளாக மாறிவிட்ட இன்றைய இலங்கையின் இளைய தலைமுறையினருக்கு இவையெல்லாம் புதிய செய்திகள் அல்ல.

போர் தீவிரம்

ஒரு புறம் ஜேர்மனி, மறுபுறம் இத்தாலி இவை போதாவென ஜப்பான் என்று போர் பல முனைகளுடு தீவிரமடைந்தது

தன்னை விசாலப் படுத்துவதற்கான தக்க தருணமாக இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திய ரஷ்யா, தன் எல்லைகளை விரிவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அநேகமாக எல்லா நாடுகளுமே இந்த யுத்தத்தினால் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ போரின் தாக்கங்களுக்கு உள்ளாகின.

ஒரு கட்டத்தில் யுத்தத்தை ஆரம்பித்தவர்களின் கைகளை கட்டுப்பாடுகளை மீறி யுத்தம் அகோரமடைந்தது.

அந்தக் கட்டத்தில் நாடுகள் மீதான ஆக்கிரமிப்புகளும், படுகொலைகளும் ஒரு போதும் நிலையாக நிற்கப் போவதில்லை என்பதை யுத்தத்தில் ஈடுபட்ட தலைவர்களும், அவர்களின் இராணுவத் தலைமைகளும் உணரத் தலைப்பட்டனர்.

இறுதியில் இந்த யுத்தத்தின் காரணகர்த்தாக்களை வீழ்த்தும் நோக்குடன் ஐஸ்சநோவர் என்ற தளபதியின் தலைமையில் நேசநாட்டுப் படைகள் அணி திரண்டன.

அதன் விளைவு, 1945 ஏப்ரல் 25ஆம் திகதி பெர்லின் நகரில் ரஷ்யப் படைகளும், அமெரிக்கப் படைகளும் சந்தித்துக் கொண்ட நிகழ்வோடு ஜேர்மனுடனான யுத்தம் முடிவை நெருங்கியது.

அமெரிக்க, ரஷ்யப்படைகளின் ஊடுருவலால் ஜேர்மன் இரண்டாக பிளவுபட்டது.

அதனை அடுத்து 1945 மே 7ஆம் திகதி ஜேர்மன் நேச நாட்டுப் படைகளிடம் சரணடைந்தது.

இவ்வாறு யுத்தத்தை ஆரம்பித்த நாடுகள் சரணடைந்ததைத் தொடர்ந்து இரண்டாம் உலக யுத்தம் முடிவுற்றதான செய்தி உலகெங்கணும் பிரகடனப்படுத்தப்பட்டது.

மூன்றாம் உலக யுத்தம் பற்றிய சிந்தனைகளில் இருந்து உலகம் இன்று வெகு தொலைவுக்கு வந்துவிட்டது.

வறுமை ஒழிப்பு பற்றியும், "எய்ட்ஸ்" போன்ற கொடிய நோய்களுக்கு முடிவு கட்டுவது பற்றியும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு பற்றியுமே இன்றைய உலகத் தலைவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

அடுத்த நூற்றாண்டில் மனிதகுலம் இவற்றுக்கு எதிராகத்தான் பெரும் போராட்டங்களை நடத்த வேண்டி இருக்கும்.

நாடுகளை ஆக்கிரமிக்கவும், ஏகபோக உரிமை கொண்டாடவும் எவருக்கும் நேரம் கிடைக்கப் போவதில்லை.

ஏனென்றால் —

"ஓஸோன்" படலத்தின் ஓட்டைகளை அவசரமாக அடைப்பது பற்றியே அடுத்த நூற்றாண்டு முழுவதும் உலகத் தலைவர்கள் ஆலோசிக்க வேண்டியிருக்கும். ★

- ஆதிரை -

## முக்கிய நிகழ்வுகள்: ஒரு தினக்குறிப்பு

★ 01 — 09 — 1939 — வெள்ளிக்கிழமை— 2 ஆம் உலக யுத்தம் ஆரம்பம்.
★ 14 06 — 1940 — பாரிஸ் நகரம் நாஜிக்களிடம் வீழ்ச்சி.
★ 22 — 06 — 1941 — பின்லாண்ட், ஹங்கேரி, ருமேனிய ஆகிய நாடுகளுடன் இணைந்துஜேர்மன் ரஷ்யா மீது படை எடுப்பு.
★ 07 — 12 — 1941 — பேர்ள் துறைமுகம் மீது ஜப்பானின் தாக்குதல் இதனால் அமெரிக்காநேரடியாக யுத்தத்தில் குதித்தது.
★ 1941 — 1943 காலப்பகுதி — மலேசியா, பர்மா, ஹொங்கொங், சிங்கப்பூர் ஆகியன ஜப்பான் வசமாகின.
★ 28 — 10 — 1942 — பாலைவன நரி என அழைக்கப்பட்ட ஜேர்மனிய தளபதி ரொமலின் படை லிபியாவில் தோற்கடிக்கப்பட்டது. இந்தப் போரில் நேசநாட்டுப் படைகளின் முதலாவது வெற்றி.
★ 1944 — நேசநாட்டுப் படைகள் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து பிரான்ஸ் கரையில் இறங்கின.
★ 23 — 04 — 1945 — பாஸிஸவாதி முசோலினி கொலை செய்யப்பட்டார்.
★ 25 — 04 — 1945 — அமெரிக்காவின் 69 ஆவது படைப்பிரிவும், ரஷ்யாவின் 58 ஆவது படைப்பிரிவும் பெர்லின் நகரில் சந்திப்பு.
★ 07 — 05 — 1945 — ஜேர்மன் நேசநாட்டுப் படைகளிடம் சரணடைந்தது.
★ 16 — 07 — 1945 — ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது அமெரிக்கா அணுகுண்டினை வீசியது.
★ 15 — 08 — 1945 — ஜப்பான் சரணடைந்தது.
★ 15 — 08 — 1945 — இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்ததாக பிரகடனம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
892/2 காலவர் வீதி
யாழ்ப்பாணம்

## தமிழர்களே கவனம்!

★ நாட்டில் ஏற்படக் கூடிய எத்தகைய நிலைமைகளையும் எதிர் கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

★ ஆயுதப் படைகளைப் பலப்படுத்துவதற்கும், சமாதானத்தை நிலை நாட்டுவதற்கும், சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மகா சங்கத்தினரின் கேள்விகளுக்குப் பதிலளித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

விடுதலைப் புலிகள் உருவாக்கக்கூடிய எந்த நெருக்கடியையும் தம்மால் சமாளிக்க முடியும் என்பதனையே ஜனாதிபதி மேலே உள்ள முதலாவது பதிலில் குறிப்பிடுகிறார். அதனைச் சுருக்கமாகச் சொல்லுவதானால் போர் ஒன்றை நடத்துவதற்கு அவர் தயாராகி விட்டார். என்பதாகும்.

ஆனால் இரண்டாவது பதிலில், செயல் ரீதியில் ஒன்றுக்கொன்று முரணான மூன்று விடயங்களை அடுத்துத் தொடுத்து அடுக்கிக்கொண்டு போயிருக்கிறார் ஜனாதிபதி.

ஆயுதப் படைகளைப் பலப்படுத்துவது போரைத் தீவிரப்படுத்தி அழிவுகளை உண்டாக்குவதற்காகும். அழிவுகளின் மத்தியில் சமாதானத்தை உண்டாக்குவது என்பது உலகஇயல்புக்கு மாறான அதிசயமாகவே இருக்கும்.

அப்படி ஓர் அதிசயத்தைப் புரிவதற்கு சந்திரிகா என்ன தெய்வத்தின் மறுபிறப்பா? வெறும் அரசியல் வாதியல்லவா! அதுவும் முதிர்ச்சி இல்லாத அரசியல்வாதியல்லவா அவர்...!

இதே பதிலில் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக சந்திரிகா கூறுவது மேலும் வேடிக்கையானதாகும். உரிமை கோரும் மக்களுக்கு அவற்றை வழங்குவதற்கு போர் எதற்கு?

உரிமைகளுக்காகப் போராடும் மக்களுக்கு எதிராக அரசாங்கம் போர் தொடுக்கிறதென்றால், அவர்களுக்குரிய உரிமைகளை வழங்காதிருப்பதற்காகவா? அல்லது வழங்குவதற்காகவா? அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்கும் உத்தேசம் இருந்தால் அழிவுகளை உண்டாக்கும் போர் எதற்கு..?

மேலும்—

இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தாம் ஏற்கனவே முடிவு செய்துவிட்டதாகவும், அதனை வெளிப்படுத்தினால் சிங்களவரிடையே அது குழப்பத்தையும், கலவரத்தையும் ஏற்படுத்தும் என்று சந்திரிகா கூறுவது ஒரு பார்வையில், கோமாளித்தனமானதும், மறுபுறத்தில் பாரதூரமானதும், பயங்கரமானதும், வம்புத்தனமானதும் ஆகும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்று வாக்களித்தவர்கள் சிங்கள மக்கள். சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டு வந்தாவது இதற்கு முடிவு கட்ட வேண்டும் என்பதே சிங்கள மக்களின் பெரும்பாலானோரின் விருப்பமாக இருந்தது; இருக்கிறது.

சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டு வருவதற்கு சந்திரிகா தயாரில்லை. எனவே சிங்கள மக்களின் மனதைக் குழப்பும் திட்டத்துடன், ஏதேனும் தீர்வைத் தாம் முன்வைத்தால் கலவரம் நடத்துமாறு அவர்களைத் தூண்டமுயலும் வம்புத்தனம் இது!

ஆகவே மொத்தத்தில் — அதிகாரப் பரவல் அடிப்படையிலான ஒரு தீர்வை தமிழர்களுக்குத் தாம் வழங்குவதாகக் கூறும் போது, அதனைத் தடுப்பதற்குச் சிங்களவர்கள் கலவரம் நடத்த வேண்டும் என்ற சதி சந்திரிகாவின் வார்த்தைகளில் ஆழமான உட்பொருளாகப் பொதிந்திருக்கிறது.

ஒற்றையாட்சி முறையை மாற்றாது அதிகாரப் பரவலை சற்று விஸ்தரித்து வடக்கு - கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மாற்றி ஒரு தீர்வை கொண்டு வருவதே சந்திரிகாவின் திட்டம்.

அதனைக் கூட நான் கொடுப்பது போல கொடுக்கிறேன் நீங்கள் கலவரத்தை ஏற்படுத்தித் தந்து விடுங்கள் என்று சிங்கள மக்களைத் தூண்டுகிறார்.

இவரா, இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப் போகிறார்? தமிழர்களே, மிகக் கவனம்!

# மற்றவனும் வாழ்வதற்கு விட்டுக் கொடுங்கள்!

# 37 மாணவருக்காக மக்கள் குரல் எழுப்ப வேண்டும்!

## தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவை தலைவர் கோரிக்கை

மனிதாபிமான முறையில் சமூகத்தின் நலனைக் கருத்தில் கொண்டு 37 மாணவர்களையும் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்க வேண்டும். அது உறுதியாகச் செய்யப்பட வேண்டிய விடயமாகும்.

பல்கலைக்கழகத்துக்கு இப்போது அனுமதி பெற்றுள்ள மாணவர்கள் வெட்டுப்புள்ளியால் தாங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் — இந்த நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருந்தால் — தங்கள் அபிலாஷைகளை எவ்வாறாவது நிறைவேற்ற முயன்றிருப்பார்கள்.

37 மாணவர்களை அனுமதிக்கும் விடயத்தில் எதிர்த்து நிற்பவர்கள் இந்த மாணவர்களின் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தால் இப்படியான எதிர்ப்பை காட்டுவார்களா?

தம்மை அனுமதிக்க வேண்டும் என்றுதான் கோரியிருப்பார்கள்.

37 மாணவர்கள் பணம் மூலம் கல்வியைப் பெற்றதாக கூறுவது பொருத்தமற்ற ஒரு கூற்றாகும்.

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களில் பெரும் பகுதியினர் எவ்வளவு பணத்தை 3 வருடமாக டியூட்டரிகளுக்கு கொட்டித்தானே படித்தார்கள் என்ற உண்மையை மறுக்க முடியுமா?

பணம் படைத்தவர்கள் மட்டும் டாக்டர் பட்டம் பெறலாம் என்ற வாதம் பிழையானது.

இந்தக் காலத்தில் எதற்கும் பணம் தேவை. பணம் ஒரு முக்கிய காரணியாக இருக்கிறது.

பணம் மூலம் அவர்கள் படித்தார்கள்; அதன் மூலம் தான் கல்வி என்ற கருத்து ஏற்கக்கூடியதல்ல.

மாணவர்களை வழி நடத்த வேண்டியவர்கள் நிர்வாகத்தில் உள்ளவர்கள். அவர்கள் மாணவர்களுக்கு எதிராகச் செயல்பட மாட்டார்கள்.

மாணவர் நலன், சமூக நலன் ஆகியவற்றை மனதில் கொண்டே அவர்கள் செயற்படுவார்கள். வழி நடத்தப்படுபவர்கள் தாம் நினைத்தபடி எதையும் செய்து விட முடியாது. எனவே அவர்களில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

மாணவர்களின் அபிலாஷைகளை மனதில் கொண்டே தம்மை அவர்கள் வழி நடத்துகிறார்கள் என்ற எண்ணம் மாணவருக்கு உருவாக வேண்டும்.

வழி நடத்துபவர்கள் குறுகிய வட்டத்துக்குள் அல்லாது சமூக நலனை மனதில் கொண்டு அதற்கேற்றவாறு செயற்படுவார்கள். அவர்கள் நியாயத்தை நிலை நிறுத்துபவர்கள்.

இன்று எழுந்துள்ள பிரச்சினை கௌரவப் பிரச்சினையாக மாற்றக் கூடாது. ஒரு தடவை எதிர்த்ததற்காக தொடர்ந்தும் எதிர்த்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பதல்ல.

காலத்தின் தேவைக்கு. மாற்றத்துக்கு ஏற்ப மாறத் தயாராக வேண்டும்.

இன்று எதிர்த்து நிற்கும் மாணவர்கள் பொதுநலனை மனதில் கொண்டு, தாங்கள் விட்டுக் கொடுத்தால் அதனால் கௌரவக் குறைவு எனக் கருதாமல் நானும் வளர வேண்டும்; மற்றவனும் வளர வேண்டும் என்ற மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்.

இந்த விடயத்தில் மக்கள் பார்வையாளராக இருக்காமல் பங்காளராகச் சேர்ந்து உரிய தீர்வுக்கு வலியுறுத்த வேண்டும். உண்மை நிலையை அறிந்து பரிதாபகரமான நிலையில் உள்ள 37 மாணவர்களுக்கு நியாயம் கிடைக்க குரல் கொடுக்க வேண்டும்.

> வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 37 பேரை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இணைந்து கல்வியைத் தொடர அனுமதிப்பது என எடுக்கப்பட்ட முடிவை அடுத்து—
>
> யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நெருக்கடி நிலை எழுந்துள்ளது.-
>
> இந்நிலை குறித்து தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளாரும், யாழ். தனியார் வைத்தியசாலைகள் (ஆனைப்பந்தி) வைத்திய அத்தியட்சகர் டாக்டர் து. வி. ஜெயகுலராஜாவும் யாழ். ஆஸ்பத்திரி மகப்பேற்று நிபுணர் டாக்டர் வே. கருணாகரனும் தெரிவித்த கருத்துக்கள் இங்கே தொகுத்து தரப்படுகின்றன.

# மனித நேய அடிப்படையில் - சமூகப் பயனுக்காக

# 37 மருத்துவ மாணவருக்கும் அனுமதி கொடுங்கள்!

## சமூகத்தின் தலையீட்டை கோருகிறார் டாக்டர் ஜெயகுலராஜா

வட- இலங்கை மருத்துவக் கல்லூரியின் மாணவர்கள் 37 பேரை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இணைந்து கல்வியைத் தொடர அனுமதிப்பது தொடர்பான விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் பார்க்க வேண்டும். சட்ட திட்டங்களை பார்க்க முடியாது. அவர்களின் பரிதாபகரமான நிலையை மனித நேயத்துடன் அணுக வேண்டும்.

இந்த மண்ணில் இருந்து மண்ணுக்காக சேவை செய்வார்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை மருத்துவ பீடங்களில் இருந்து வெளியேறும் பலர் சுயநோக்கத்துடன் செயற்படுகிறார்கள்.

இலவசமாக, மக்கள் ஆதரவுடன் கல்வியைப் பெற்ற இவர்கள், தம்மக்களுக்கு நன்றிக் கடனாக இங்கு சேவையாற்ற வேண்டும் என்பதை மறந்து போகிறார்கள்.

சொந்த நலனில் இவர்களுக்கு அக்கறை இருக்கலாம். அதை நாம் மறுக்கவும் முடியாது. ஆனாலும் அதற்கு மேல் சமூகவாழ்வு, பொதுநல நோக்கு ஆகியன சொற்பமாகவேனும் அவர்களுக்கு இருக்கவேண்டும்.

பல்கலைக்கழகத்துக்கு உட்புகுபவர்களுக்கும், உட்புக முடியாதவர்களுக்கும் இடையில் புள்ளிகளில் பெரிய வித்தியாசம் இருப்பதில்லை. இருதரப்பினருக்கும் இடையில் புள்ளி ஒரு முக்கிய விடயமாகக் கருதத் தேவையில்லை.

இன்று இந்த மண்ணில் ஏற்பட்டுள்ள வைத்தியர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு வட இலங்கை மருத்துவக் கல்லூரியில் உள்ள தகுதி பெற்ற மாணவர்களுக்கு உரிய சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். இவர்களுக்கு நிச்சயம் வாய்ப்பு அளிப்பது நல்லது என்பதே எனது தனியான கருத்தாகும்.

மாணவர் பெருக்கத்துக்கு ஏற்ப சரியான திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தாததால் தகைமை உள்ளவர்கள் பலரும் பல்கலைக்கழக அனுமதி பெறாமல் வெளியே நிற்கிறார்கள்.

அரசு அவர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுக்காத போதும், அந்தத்துறையில் ஆர்வம் கொண்டு இவர்கள் அந்தத்துறைக்கு வந்துள்ளார்கள்.

உயர்கல்வி அமைச்சு நடத்திய 2 ஆவது எம். பி. பி. எஸ், பரீட்சையில் இவர்கள் 37 பேரும் சித்தியடைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது மண்ணுக்கு வைத்தியர்களின் தேவை இருந்தது. மூத்தோர்கள் சேர்ந்து தேவையை உணர்ந்து மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தனர் 8, 9 வருடங்களாக அவர்கள் இந்தத் துறையிலேயே இருக்கிறார்கள்.

இந்த மாணவர்கள் விடயத்தில் மனிதாபிமான அடிப்படையில் செயற்பட வேண்டும் இனி மேல் இத்தகைய நிலை மாணவருக்கு ஏற்படாமல் வரையறை செய்ய வேண்டும்,

சமூக மேம்பாட்டில் பல்கலைக்கழகம் முக்கிய பங்கு எடுக்க வேண்டும். அறிவியல் ரீதியாக மட்டும் வளராமல் பொதுநல நோக்குடன் சமூக மேம்பாட்டுக்கான வழிமுறைகளை சிந்திக்கும் சமூகத்தை உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு விடயத்திலும் மனிதநேயத்தின் அடிப்படையில் செயற்படத்தக்க மாணவ சமூகம் உருவாக வேண்டும்.

உடல், உள ரீதியாக மேற்கொள்ளப்படும் செயல்கள் மனிதநேய அடிப்படையில் சிந்திக்கப்பட வேண்டும்.

சமூகமேம்பாடு, மனித நேயம் என்றும் அடிப்படையில் மாணவர்கள் சிந்தித்தால் தவறான வழியில் செல்வதை தவிர்க்க முடியும் என்பதே எனது கருத்தாகும்.

இன்று எழுந்துள்ள இந்தப் பிரச்சினையை கௌரவப் பிரச்சினையாக எடுக்கக் கூடாது; அணுகவும் கூடாது. பொறுப்புணர்ச்சியுடனும் மனித நேயத்துடனும் செயற்பட்டால் இப்பிரச்சினை தானாகவே தீர்ந்துபோய் விடும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் இதற்கு அவசியமாகும்.

இன்று எழுந்துள்ள இந்த முக்கிய பிரச்சினையில் சமுதாயம் பங்கு பற்ற வேண்டும்.

இந்தப் பிரச்சினையில் ஏனோ தானோ என்று சமூகம் ஒதுங்கியிருக்க முடியாது.

சமுதாய நலனை பாதிக்கும் செயல்கள் அநீதிக்கு எதிரான செயல்கள் போன்றவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்து, நியாயத்தை நிலைநாட்ட சமூகம் முன்வர வேண்டும்.

விடயங்களைப் புரிந்தவர்கள், சமுதாய நலனில் அக்கறையுள்ளவர்கள் துணிந்து கருத்து வெளியிட வேண்டும்.

அநியாயம் எந்த வடிவில் வந்தாலும் அதற்கு எதிராக நீதிக்காக குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

# 37 மாணவரும் டாக்டர்களாக சித்தியடைந்த பின்னர் வடக்கில் பணிபுரிவதைத் தவிர வேறு வழியில்லை!

## நீதி வழங்குவது சமூகத்திற்கு நன்மை என்கிறார் டாக்டர் கருணாகரன்

வட- இலங்கை மருத்துவக் கல்லூரி சரியா, பிழையா என்பது குறித்து இப்போது பிரச்சினை இல்லை.

வட- கொழும்பு மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த 800 மாணவர்களுக்கு நீதி நியாயம் சிங்கள அரசால் வழங்கப் பட்டுள்ளது.

ஆனால் வட இலங்கை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த 37 மாணவர்களுக்கு இதுவரை நீதி, நியாயம் கிடைக்கவில்லை.

அந்த 37 மாணவர்களையும் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைப்பதன் மூலம் அவர்களுக்கு தீர்வு வழங்க சிங்கள அரசு முன்வந்த போதிலும் யாழ். மருத்துவ மாணவர்களின் எதிர்ப்புக் காரணமாக நீண்டகாலமாக அது நடைமுறைப்படுத்தப் படாமல் இருந்து வருகிறது. அந்த 37 மாணவர்களுக்கும் நீதி வழங்கத் தடையாக இருப்பது அநீதியாகும்.

இந்தப் பிரச்சினை திரும்பத் திரும்ப வழமை போல வரப் போகும் பிரச்சினை அல்ல.

அத்தோடு இங்கு வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை; பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கையும் குறைவு.

இந்நிலையில் 37 மாணவர்களை மருத்துவக் கல்லூரிக்கு அனுமதித்து அவர்களை டாக்டர்களாக உருவாக்குவது சமூகத்துக்கு உதவுவதாகவே அமையும்.

இவ்வாண்டு யாழ். மருத்துவ பீடத்தில் இருந்து வெளியேறிய 86 பேரில் 14 பேர் மட்டுமே யாழ். ஆஸ்பத்திரியில் பயிற்சிக்கு வந்துள்ளார்கள்.

இந்த 37 மாணவர்களை அனுமதிக்க திட்டமிடப்பட்டுள்ள — மருத்துவ பீடத்தின் 3 ஆம் ஆண்டுப் பிரிவில் தற்போது 40 பேரே உள்ளனர். அவர்களில் எத்தனை பேர் யாழ். ஆஸ்பத்திரியில் பயிற்சிக்கு வரப்போகிறார்கள்? நான்கு அல்லது ஐந்து பேரே யாழ். ஆஸ்பத்திரிக்கு வரலாம் என எதிர்பார்க்கலாம். அதுதான் கடந்த கால அனுபவம்.

அப்படியான [illegible] யாழ். ஆஸ்பத்திரியில் வைத்தியர் இன்றி [illegible] நிலை கூட ஏற்படலாம்

ஆனால் இந்த 37 பேருக்கும் யாழ் மருத்துவ பீடம் பட்டம் வழங்கப் போவதில்லை. இவர்களுக்கு வட இலங்கை மருத்துவ கல்லூரி பட்டமே வழங்கப் படவிருக்கிறது.

மருத்துவபீடங்களில் இருந்து சித்தி பெறுவோரின் திறமை அடிப்படையான பட்டியலில் இந்த 37 பேரும் கடைசியில்தான்— அடிமட்டத்தில்தான்— குறிப்பிடப்படுவார்கள்.

இப்படி கடைசியில் இருப்பவர்கள் அம்பாந்தோட்டை, பிபிலை பகுதிகளை விரும்பினால் ஒழிய யாழ்ப்பாணத்தில் சேவை செய்யவே இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள் வேறுவழியின்றி இவர்கள் இங்கே கடமை செய்ய வேண்டியிருக்கும்.

அவர்களும் தாம் சித்தியடைந்த பின்னர் இப்பிரதேசத்தில் நீண்ட காலம் பணியாற்றுவோம் என உறுதி கூறி [illegible] இவர்கள் இங்கு [illegible] வது வட - கிழக்குக்கு வரப் பிரசாதமாகவே அமையும்.

இவர்களுக்கு தகுதியில்லை என்று பிரசாரம் செய்யப்படுகிறது யாழ். மருத்துவக் கல்லூரிக்கு மாவட்ட அடிப்படையில் தெரிவானவர்களை விட இவர்கள் கூடுதல் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இவர்கள் எல்லோருக்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தகுதிச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

இந்த முறையில் இவர்கள் பட்டதாரிகளாக வெளியேறினால் அவர்கள் சமூகத்துக்கு நன்மை பயப்பவர்களாகவே இருப்பார்கள் என்று நாம் கருதவேண்டும்.

இவர்கள் பணக்காரர் அல்லர். அவர்களில் பலர் கடன் வாங்கி படித்து கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளவர்கள்.

இவர்களிடம் பணம் இருந்திருந்தால் இவர்கள் இந்தியா, லண்டன், ஆஸ்திரேலியா சென்று பட்டம் பெற்றிருக்கலாம். இவர்களுடன் இருந்தவர்கள் பலர் அப்படிச் சென்று டாக்டராகி விட்டார்கள் — என்றார்.

## புலிகளின் குரல் வானொலியில்

### 12 — 05 — 1995

**வெள்ளி இரவு**

★ 8-02— கலைப்பஞ்சரி— அறிமுகம், அறிமுகமாவது பொது நிர்வாக சேவையினரின் பொறியியல் துணைவெளியீடான ''நிர்மாணி'' முதல் சஞ்சிகையும், நாற்று சஞ்சிகையின் 2 வது இதழும், சிறுகதை— ஆனந்தி எழுதிய ''அதுக்குப் பிறகு'' கவிதை— கலைக்கோன் எழுதிய ''தன்னாட்சி உரிமைக்காய்''
★ 8-25— கணப்பொழுது- சி. கண்ணம்மா எழுதிய ''லெப். கேணல். நவம்''
★ 8-30— செய்திகள்
★ 8-40— அரசியல் அரங்கம் - வே. பாலகுமாரன் எழுதிய 'இன்னொரு மைலாய் படுகொலை''
★ 8-50— ஏர்முனை— ''வாருங்கள் வன்னிக்கு'' குறுநாடகம்

### 13 — 05 — 1995

**சனி காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15— நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40— நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**வெள்ளி மாலை**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-03 — எழுச்சிகீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — கனநேரக் காவியங்கள்
★ 5-30 — மண்ணின் குரல்
★ 5-40 — நேயர் கடிதங்கள்
★ 5-45— வெற்றிச் சுவடுகள்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02— தொடர் நாடகம்— பொம்பிளை பார்க்கப் போறம்— அங்கம் 1
★ 6-15— விளையாட்டுச் செய்திகள்
★ 6-20— என் தெரிவு

## கலைவிழா

வலிகாமம் மேற்கு, மே 2

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினரின் கலைவிழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 6மணியளவில் சங்கானை கலாசாரமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம விருந்தினராக சங்கானைக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் கலந்து கொள்கின்றார்.

(க-12-175)

## கால் நடை கருத்தரங்குகள்

தென்மராட்சி, மே. 9

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கால் நடைகள் மற்றும் கோழிகளுக்கு நோய்கள் ஏற்படுவதை தடுப்பது சம்பந்தமான கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

இக் கருத்தரங்குகளை சாவகச்சேரி கால் நடை வைத்தியர் அலுவலக உத்தியோகத்தர்கள், ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் நடத்தி வருகின்றனர்.

அத்துடன் கோழிகளுக்கு நோய்த்தடுப்பு ஊசிகளும் ஏற்றப்படுகின்றன.

## மருந்து வகைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 12

நோயாளர் நலன்புரி சங்கம் யாழ் பொது மருத்துவமனைக்கு 4ஆயிரத்து 450 ரூபா பெறுமதியான மருந்து வகைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது

யாழ் பொது மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் இம் மருந்துப் பொருள்களை கடந்த செவ்வாயன்று பெற்றுக் கொண்டார்.

## தேக்குமரக்கன்று விநியோகம்

தென்மராட்சி. மே 12

தென்மராட்சிப் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள ஒவ்வொரு ஆலயத்திற்கும் தேக்கு மரக்கன்று பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சாவகச்சேரிப் பிரிவினர் இம் மரக் கன்றுகளை இலவசமாக வழங்கியுள்ளனர்.

(க-117)

# கம்பன் விழாவில் இன்று சுழலும் சொற்போர்

யாழ்ப்பாணம், மே 12

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 15 ஆம் ஆண்டு நிறைவுக் கம்பன் விழாவின் நான்காம் நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு திரு. க. வை. தனேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும்.

காலை சிறப்பு நிகழ்வாக ''அனுமனின் ஆற்றல் மிகு பேருரைகளிலே தலையாயது எது'' என்பது பற்றிய சுழலும் சொற்போர் இடம் பெறும்.

மாலை நிகழ்வுகள் 4-30 மணிக்கு கலாநிதி க. குணராசா தலைமையில் ஆரம்பமாகும்.

மாலை நிகழ்வுகளாக சங்கீத பூஷணம் எல். திலகநாயகம் போலின் கம்பன் இசையமுது, இலங்கையின் தலைமைப் பிரஜையெனும் தகுதி வழங்கப்படவேண்டியது இராவணனுக்கே!, கும்பகர்ணனுக்கே!, விபீடணனுக்கே!, இந்திரசித்தனுக்கே! என்னும் தலைப்பிலான இலக்கிய ஆணைக் குழு என்பன இடம் பெறும்.

[ஐ-14-111]

# வினை தீர்க்க வழிபாடு

சிவபிரான் எங்கும் நிறைந்தவராயினும், ஆன்மாக்களை உய்விக்க வேண்டும் என்னும் கருணையினால் திருக்கோயில்களில் இருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனிகளை இடமாகக் கொண்டு நின்றும், அருள் புரிகின்றார், இதைச் சிவஞானபோதம்பன்னிரெண்டாம் சூத்திரத்தில் 'ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.'' எனக் கூறுகின்றது. சிவாலயத்தையும் சிவன் எனக் கண்டு வழிபட்டு வாழும் இயல்பினரே 'சிவன் முத்தராவர்' என்பது பொருளாகும்

இங்ஙனம் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்குப் பெருந்

## ஞானக்கதிர்

துணையாயுள்ள சிவாலய வழிபாட்டு முறைகளை நாமறிந்து வழிபாடு செய்து உய்வடைய வேண்டும்.

திருக்கோயிலுக்குப் போகும் போது, நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, தேங்காய்,பழம், பாக்கு, வெற்றிலை முதலியன கொண்டு செல்லுதல் வேண்டும். திருக்கோயிலுக்குச் சமீபத்தவுடனே கால் கழுவிக் கோபுரத்தைத் தரிசித்துச், சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே செல்லுதல் வேண்டும். உள்ளே சென்றதும் பலிபீடம், கொடிமரம், இடபதேவர் வழிபாடு முடித்து, ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும், பின்பு கோயிலைச் சுற்றி வலம் வந்து, இறைவனை வணங்குதல் வேண்டும்.

சுவாமி சந்நிதானங்களை வணங்கும் போது முறையே விநாயகர், நந்திதேவர், மூலலிங்கம், சபாபதி, சோமாஸ்கந்தர், பரிவாரதேவர்கள், மூலஸ்தானம், அம்மையார், சண்டேசுரர், வயிரவர் முதலிய தேவர்களை வணங்குதல் வேண்டும். நித்தம் ஆலய தரிசனம் செய்ய இயலாதவர்கள் புண்ணிய காலங்களிலாயினும் இறைவனைத் தரிசிக்க வேண்டும். ''ஆலயந் தொழுவது சாலவும் நன்று'' என்பதை நாம் மறக்கக்கூடாது.

கோயில் - கோ + இல் என்பது இறைவனின் இருப்பிடமாகும். கோயில்களைத் தரிசித்துப் பதிகங்கள் பாடி, முத்திநிலை எய்திய நாயன்மார்கள் வரலாறுகள் எமக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்றார் ஔவையார். எனவே நாம் கோயில்களை அமைத்து, வழிபாடு செய்து, எமது பிறவிப் பயன்களை நீக்கிக் கொள்ளவேண்டும்.

— அரியாலையூர்
திருநாவு. ஈஸ்வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ பீடத்தில்

# 37 மாணவரையும் சேர்க்குமாறு தமிழீழ கல்விப் பேரவை வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 12

வட-இலங்கை மருத்துவ கல்லூரியில் பயின்ற 37 மாணவர்களையும் யாழ்' பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைத்து கல்வியைத் தொடர ஏற்பாடு செய்யுமாறு கோரும் தீர்மானம் ஒன்றை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை எடுத்துள்ளது.

பேரவையின் கடந்த மாதக் கூட்டம் கடந்த 15 ஆம் திகதி நடந்த வேளை இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 37 மாணவர்களையும் மருத்துவ பீடத்துடன் இணைத்து விசேட வகுப்பு நடத்தவும் —

அவர்களுக்கு பிரத்தியேக பரீட்சை நடத்தி பட்டம் வழங்கவும் — ஏற்பாடு செய்யுமாறு அத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தின் பிரதிகள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், மற்றும் பீடாதிபதிகள், விடுதலைப்புலிகள் அரசியல் துறை, நிர்வாக சேவை ஆகியவற்றுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

(அ-3)

## சிகிச்சை நிலைய திறப்பு விழா

வல்வெட்டித்துறை மே 12

வல்வை (இந்திராணி) ஊறணி மாவட்ட வைத்திய சாலை அபிவிருத்திச் சபையினரால் புதிதாக அமைக்கப்பட்ட சத்திரசிகிச்சை பிரிவு இன்று வெள்ளிக்கிழமை காலை. 9.30 மணிக்கு மாகாண பிரதி சுகாதாரப் பணிப்பாளர். வைத்திய கலாநிதி திரு. வை. ஸ்ரீகாந்தா அவர்களால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்படும்

(இ-155)

# மண்மீட்புப் பணியின் ஒரு பங்களிப்பாக குருதிக்கொடை இருந்து வருகிறது

## கௌரவிப்பு விழாவில் பாலகுமாரன்

யாழ்ப்பாணம், மே 12

தமிழ் நாட்டில் குருதியை விற்று வாழும் கூட்டம் இன்றும் இருந்துவரும் காலகட்டத்தில், எமது தேசத்திலும் இப்படியான தொரு நிலை ஏற்படாது நோயாளர் நலன் புரி சங்கத்தின் குருதிக் கொடை இயக்க சேவை மேலும் பெருகவேணடும்.

எமது மண்ணின் சேவை அடிப்படையில் மண் மீட்புப் பணியின் ஒரு பங்களிப்பாக குருதிக்கொடை இருந்து வருகிறது.

நோயாளர் நலன்புரி சங்கத்தின் குருதிக் கொடையாளிகள் கௌரவிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் திரு. பாலகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

நோயாளர் நலன் புரி சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி சி சிவபாலன் தலைமையில் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள நோயாளர் நலன்புரி சங்கத்தின் நடுவப் பணியக முன்றலில் நேற்று மாலை இந்த விழா நடைபெற்றது.

விழாவில் திரு பாலகுமாரன் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது.

போராட்டம் விரிவடையும் போது இங்கேயும் ஒரு சமூக குருதிக் கொடையாளர் அணி உருவாகவேண்டும்.

விழுமியங்களை மீட்க குருதிக் கொடையின் முக்கியத்துவத்தை குடும்ப சமூக மட்டங்களுக்கு எடுத்தியம்ப வேண்டும்,

போராளியின் ஈகத்தைப் போன்று இந்த குருதிக் கொடையும் ஒரு வகை ஈகம் தான்.

1970 இல் தமிழீழ விடுதலைப் போராட்டம் மூலை முடுக்குகளிலேயே காணப்பட்டது. இன்று போராட்டம் சர்வதேச பரிமாணம் பெற்றுள்ளது.

அதற்கு எமது சமுதாயமும் தயாராக வேண்டும். எமது வாழ்க்கை இயற்கையுடன் ஒட்டிய ஒரு செயல்பாடு—

நாம் எவ்வளவுக்கு நவீனமாக செயல் பட்டாலும் இயற்கை ஒரு சங்கிலியாகத் தான் எங்களுக்குள் இருக்கிறது. எங்களுக்காக மற்றவரும் மற்றவருக்காக நாங்களும் என வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என்றார்.

இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி தா அருள் தமது உரையில் கிளாலிக்கு அப்பால் இருந்து குருதி தேவைப்படும் நோயாளர்கள் பெரும் போராட்டத்தின் மத்தியில் இங்கு வரும் போது பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்று இவர்களை வைத்து பணம் சம்பாதிக்கும் கூட்டம் இங்கு இருந்து வந்தது.

இந்த கருத்தில் கொண்டு நோயாளர் நலன்புரி சங்கத்தின் குருதிக்கொடை இயக்கம் முதலாவது ஆண்டில் சிறப்பாக செயல்படுத்தியுள்ளது என்றார்.

இவ்விழாவில் 31 குருதிக் கொடையாளிகள் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் நோயாளர் நலன்புரி சங்கத்தின் செயலாளர் திரு சு. சோமசுந்தரமும் கலந்து கொண்டார்.

பனையால் விழுந்து நடக்க முடியாத நிலையில் உள்ள மல்லாகம் கல்லாரையைச் சேர்ந்த மா, இராசையா என்பவருக்கு முச்சக்கர வண்டியின் துணையுடன் சுய தொழில் செய்வதற்காக 4 ஆயிரம் ரூபா கடனும் சங்கத்தினால் இவ்விழாவில் வைத்து வழங்கப்பட்டது.

இறுதியில் சங்கத்தின் பொருளாளர் திரு பாலகிருஷ்ணன் நன்றியுரையாற்றினார்.

(இ-4)

# மருத்துவ பீட மாணவர்களுக்கு ஆதரவாக வைத்தியர்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 12

யாழ் போதனா வைத்திய சாலையில் தற்சமயம் கடமையாற்றும் 105 வைத்திய அதிகாரிகளில் 74 பேர் யாழ் மருத்துவ பீட பட்டதாரிகள் ஆவர். எனவே யாழ் பல்கலைக்கழக மருத்துவப் பட்டதாரிகள் இங்கு பணியாற்றுவதில்லை என்பது உண்மைக்குப் புறம்பானதாகும்.

இவ்வாறு யாழ். மருத்துவ பீட பட்டதாரிகளாகிய யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்கள் வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய யாழ் மருத்துவ பீட மாணவர்கள் முன்னெடுத்துள்ள உண்ணா விரதம் மற்றும் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்குத் தாம் பூரண ஆதரவைத் தெரிவிப்பதாகவும்—

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையேயான நல்லுறவு தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்றும் யாழ் பல்கலைக்கழக வைத்தியப் பட்டதாரிகள் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

வட இலங்கை தனியார் மருத்துவ கல்லூரி மாணவர் சம்பந்தமாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ் கிளையினால் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் எடுக்கப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் வைத்திய பட்டதாரிகள் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டி உள்ளனர்.

வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்துடன் இணைக்கக் கூடாது என்பது அந்தத் தீர்மானங்களில் ஒன்றாகும். [அ]

## யாழ். மருத்துவ பீட மாணவர் உண்ணாவிரதம்

### தொடர்ந்து நடக்கிறது

யாழ்ப்பாணம், மே 12

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் ஆறு பேர். இரண்டாவது நாளாக நேற்றும் தமது உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தனர்.

அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக மருத்துவ பீடத்தின் ஏனைய மாணவர்களும் ஏனைய பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்.

உண்ணாவிரதம் இன்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்து நடைபெறும் என்றும் —

நான்காவது நாளான சனிக்கிழமை இப்போது உண்ணாவிரதம் இருப்பவர்களுடன் புதிய அணி ஒன்று சேர்ந்து கொள்வர் என்றும் — மருத்துவ மாணவர் ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்தன.

வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களை மருத்துவ பீடத்தில் அனுமதிக்கும் முடிவை ஆட்சேபித்து மூன்று கோரிக்கைகளை முன்வைத்து மருத்துவ பீட மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருவது தெரிந்ததே.

[அ-7]

## விவரத்திரட்டு

வலிகாமம் மேற்கு மே 12

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 உத்தியோகத்தர் பிரிவிலும் கடல் வலயச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களின் விவரங்களை கிராம உத்தியோகத்தர்கள் திரட்டுகின்றனர்

(க-175)

**புலிகள்..**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு எனவும் இராணுவ வட்டாரங்கள் நம்புவதாக அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல் காரணமாக விமானத் தாக்குதலை மேற்கொள்ள முடியாத நிலைமை தோன்றியுள்ளதால் இந்தப் பின்னடைவு இராணுவத்தினருக்கு மிகவும் ஒரு பாதகமான நிலையைத் தோற்றுவித்துள்ளது என்றும் —

இரசாயன யுத்தத்திற்கு முகங்கொடுக்கும் ஆற்றல் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு மிகவும் குறைவாகவே உள்ளது என்றும் —

வடபகுதி இராணுவ முகாம்களுக்கும் கொழும்பிலுள்ள இராணுவ தலைமையகத்திற்கும் இடையேயான தொலைத் தொடர்புகளைத் துண்டிக்க விடுதலைப் புலிகள் முயற்சித்து வருகின்றனர் என்றும் 'திவயின' பத்திரிகை கூறுகிறது.

'ஒ-10)

## 250க்கும் மேல் படையினர் பலி

யாழ்ப்பாணம், மே 12

மூன்றாம ஈழப்போர் ஆரம்பமான பின்நேற்று முன்தினம் வரை 250க்கும் மேற்பட்ட ஸ்ரீலங்காப் படையினர் புலிகளின் தாக்குதலில் கொல்லப் பட்டுள்ளார்கள்.

(இ-7]

**3 வெளி...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதியிலிருந்து மக்கள் வெளியேறுவதைப் புலிகள் தடை செய்துள்ளதாகவும், இவற்றையெல்லாம் பார்க்கும் போது வடபகுதி முகாம்கள் மீது புலிகள் பாரிய தாக்குதலை மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பது தெளிவாகிறது எனவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

[ஒ 10]

**காட்டுப...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலை வீதியில் உள்ள 10 ஆம் கட்டையில உள்ளது

புலிகள் பத்து நிமிடத் தாக்குதலில் இந்த இராணுவ பொலிஸ் நிலையத்தைக் கைப்பற்றி சுமார் ஒரு மணி நேரம் தமது பூரண கட்டுப் பாட்டில் வைத்திருந்தனர்.

[இ-7]

**இலங்கைக்கு...**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகள் மீது தனது எதிர்ப்புணர்வைத் தெரிவித்துள்ளதும் ராஜீவ் காந்தியை புலிகளே கொலை செய்தனர் என ஏற்றுக்கொண்டுள்ளதும் தனக்குத் திருப்தியளிப்பதாக சுப்பிரமணியசுவாமி மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ எஸ் ஐ அமைப்பிடமிருந்து விமான எதிர்ப்பு ஆயுதங்கள் உட்பட இராணுவத் தளபாடங்கள் பலவற்றைப் பெற்றுள்ள புலிகள், காலத்தைக் கடத்தும் நோக்கிலேயே சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவருவதாக கடந்த மார்ச் 25 ஆம் திகதி இந்தியப் பிரதமர் அளித்த பகல் உணவு விருந்தின்போது சந்திரிகாவிடம் தான் தெரிவித்ததாகவும் சுப்பிரமணிய சுவாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஓ-10)

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், மே 12

காட்டுப்புளியங்குளம் இராணுவப் பொலிஸ் நிலையம் மீது நேற்று முன்தினம காலை 5 20 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது அள்ளப்பட்ட ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | ரி 81 எல் எம் ஜி | — 1 |
| ★ | ஏ கே எல் எம் ஜி. | — 2 |
| ★ | ஆர்.பி ஜி. | — 1 |
| ★ | 60 மி.மீ. மோட்டார் | — 1 |
| ★ | 40 மி மீ. பிஸ்டல் | — 2 |
| ★ | ரி 56 ஒன்று ரகத் துப்பாக்கி | — 13 |
| ★ | ரிப்பிட்டர் துப்பாக்கி | — 2 |
| ★ | ஷொட்கன்கள் | — 8 |
| ★ | ரி 81 எல்.எம்.ஜி. ரம் மகஸின் | — 4 |
| ★ | ஏ.கே.எல்.எம்.ஜி. ரம் மகஸின் | — 13 |
| ★ | ஏ.கே. ரவைக்கூடுகள் | — 62 |
| ★ | ஏ கே.எல்.எம் ஜி தொடர் ரவை | — 1258 |
| ★ | ஆர் பி.ஜி ஷெல்கள் | — 8 |
| ★ | ஆர்.பி ஜி புறொப்ளர்கள் | — 7 |
| ★ | ஆர் பி.ஜி ஸ்கோப் | — 1 |
| ★ | 60 மி மீ ஸ்கோப் | — 1 |
| ★ | 60 மி.மீ. ஷெல்கள் | — 14 |
| ★ | 40 மி.மீ. ஷெல்கள் | — 77 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 8551 |
| ★ | 5.56 ரவைகள் | — 150 |
| ★ | 5.56 பயிற்சி ரவைகள் | — 30 |
| ★ | நேட்டோ ரவைகள் | — 22 |
| ★ | 303 ரவைகள் | — 9 |
| ★ | தொலைத்தொடர்பு சாதனம் | — 1 |
| ★ | தொடர்பு சாதன குறோஸ் | — 1 |
| ★ | வோக்கி | — 1 |
| ★ | வோக்கி பவர் பக் | — 2 |
| ★ | பிஸ்டல் தாங்கி அணி | — 1 |
| ★ | ஏ.கே தாங்கி அணிகள் | — 14 |
| ★ | ஏ கே எல் எம் ஜி தாங்கி அணிகள் | — 2 |
| ★ | 40மி மீ. துப்பாக்கி தாங்கி அணிகள் | — 13 |
| ★ | 60மி மீ. மோட்டார் துப்பரவாக்கி | — 1 |
| ★ | 60மி மீ குறிநிலை காட்டி | — 1 |
| ★ | 60மி மீ. மையவடு நீக்கி சாதனம் | — 1 |
| ★ | 60மி மீ. சாவி தொகுதிகள் | — 1 |
| ★ | 60மி மீ சிறிய கத்தி | — 1 |
| ★ | 60மி மீ. தூக்குகண்டு | — 1 |
| ★ | 60மி மீ. ஷெலின் பின் | — 18 |
| ★ | கைக் குண்டுகள் | — 3 |
| ★ | ரி 56 துப்பரவாக்கித் தொகுதிகள் | — 15 |
| ★ | இராணுவ தலைக்கவசங்கள் | — 1 |
| ★ | கமரா | — 16 |
| ★ | தண்ணீர்க் கான்கள் | — 11 |
| ★ | தண்ணீர்க் கான் தாங்கிகள் | — 11 |
| ★ | இராணுவப் பைகள் | — 14 |
| ★ | மழைக் கவசங்கள் | — ஒரு அந்தர் |
| ★ | சம்பி றோல் | — 6 |
| ★ | 'போக்கஸ் லைற், | — 49 |
| ★ | பொலீஸ் சீருடைகள் | — 89 |
| ★ | பொலீஸ்சீருடை முழுநீளக்காற்சட்டை | — 6 |
| ★ | காலணிகள் | — 7 |
| ★ | சாதாரண பைகள் | — 16 |
| ★ | ராணுவ சப்பாத்துக்கள் | — 32 |
| ★ | பொலீஸ் சப்பாத்துக்கள் | — 1 |
| ★ | 100 அம்பியர் மின்கலம் | — 1 |
| ★ | 60 மி மீ ஏ போட்லைற் | — 11 |
| ★ | ஏ போட்லைற் மின்குமிழ்கள் | |
| ★ | 60 மி மீ மோட்டார் உதிரிப்பாகத் | — 2 |
| | தாங்கி அணிகள் | — 20 |
| ★ | பொலீஸ் தொப்பிகள் | — 21 |
| ★ | பொலீஸ் இடுப்புப் பட்டிகள் | — 15 |
| ★ | இராணுவ இடுப்புப் பட்டிகள் | — 1 |
| ★ | வானொலிப் பெட்டி | |

[இ-7]

**பல்கலைக...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து அறிவிக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தம்மைச் சந்தித்த நாடாளுமன்ற எம்பிக்கள் தூதுக்குழு ஒன்றிடம் வாக்குறுதி அளித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [அ-4]


உ

சிவமயம்

பாராட்டுவிழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறைத் தலைவர்

கலாநிதி

ப. கோபாலகிருஷ்ணஐயர் அவர்கள்

பேராசிரியராக நியமனம் பெற்றதையிட்டு

இலங்கை இந்து குருமார் ஒன்றியம்

எம் பெருமான் திருவருளை முன் வைத்து அவரை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறது

இந்து குருமார் ஒன்றியம், இணுவில் தர்மசாஸ்தா குருகுலம், யாழ். சிவானந்த குருகுலம ஆகியவை இணைந்து பேராசிரியர் அவர்களுக்கு

நடத்தும்

★ பாராட்டுவிழா ★

அதனைத் தொடர்ந்து

சமஸ்கிருத நூல் வெளியீட்டு விழா

ஆகியன நடைபெறும்

காலம்: சித்திரை 30 ஆம் திகதி (13-05 95) சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணி

இடம்: குமாரசாமி மண்டபம், யாழ். இந்துக் கல்லூரி

தொடக்கவுரை: சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக்குருக்கள் அவர்கள் (தலைவர், இந்து குருமார் ஒன்றியம்)

விழாத் தலைவர்; பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் (தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)

சிவாச்சாரியார்கள், சமயப் பெரியார்கள், அறிஞர்கள் ஆகியோர் வழங்கும்

✶ ஆசியுரைகள் ✶ வாழ்த்துரைகள் ✶ பாராட்டுரைகள் ஆகியன இடம்பெற உள்ளன.

இந்து குருமார் ஒன்றியத்தினால் வெளியிடப்படவுள்ள நூல்கள்

1) நவக்கிரக பூஜா விதானம்
2) தைத்திரீய உபநிஷத்

குருமார்கள் அறிஞர்கள், அன்பர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

— நன்றி —

இலங்கை இந்து குருமார் ஒன்றியம் யாழ். மாவட்டம்

[சி-1201]



புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

K. K. S. வீதி, கொக்குவில்.

A/L 95 மீட்டல் 96 வகுப்புக்கள்

நாடகமும் அரங்கியலும் திரு. கந்தவேள்

சனி - ஞாயிறு
11-30 12-30

ஆரம்பம்: 13-05-95

[சி/1356)



நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

A/L 97

தூய கணிதம் / பிரயோககணிதம் ) திரு. கமலசிங்கம்

ஆரம்பம்: 15-05-95

[திங்கள் பி. ப. 4மணி]

(சி/1205)


## மரண அறிவித்தல்கள்

**அருட்சகோதரி**

**மேரி லொறெற்றோ (தி.கு)**

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்பச் சபையைச் சேர்ந்தவருமான அருட் சகோதரி லொறெற்றோ குரூசப்பிள்ளை நேற்று (11-05-1995) காலமானார்.

அவரது இறுதிச்சடங்கு பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு இடம்பெற்று. புனித மரியாள் தேவாலயத்தில் பலிபூசையுடன் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்;
மனுவேற்பிள்ளை (சகோதரன்)
[ஆசிரியர், தொழில்நுட்பக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

மாகாணத் தலைவி,
யாழ்ப்பாணம். (36613)

**கணபதிபபிள்ளை கனகரெத்தினம்**

[மண்டைதீவு]

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கணபதிப்பிள்ளை கனகரெத்தினம் [ஓய்வுபெற்ற அதிபர்] 8-5-95 இல் கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னார் சந்திராவின் அன்புக்கணவரும், யோகினி, சங்கரி, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மண்டைதீவு முன்னாள் கி. ச. தலைவர் [சேர்மன்] கைலாசபிள்ளை, திருமதி நாகலட்சுமி பசுபதிச் செட்டியார், திருமதி இராசலட்சுமி சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரருமாவார் அன்னாரின் தகனக்கிரியைகள் 10-5-95 கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கை. விக்னேஸ்வரன் [விக்னா]
[பெறாமகன்]

21, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை. [36605]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது